பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

A/L 90
விஞ்ஞான மாணவர்களுக்கு
| | Sat. Sun. |
|---|---|
| சௌந்தி | 9-10 |
| செல்வா | 8-9 |
| ஞானம் | 6-7 |
| பாலா | 7-8 |
| கிருஷ்ணகுமார் | 10-12 |

பாடங்கள் அனைத்தும் புதிய அலகுகள் ஆரம்பம்.
NIRU Tuition Centre
KONDAVIL.

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ 2/.

O/L 88 DEC.
தோற்றும் மாணவர் களுக்கு
துரித மீட்டல் வினு விடை
முழுப்பாடத் திட்டமும் பூர்த்தி செய்து கொடுக்கப்படும்.
காலை: 8 00 1 00 வரை
NIRU Tuition Centre
KONDAVIL.

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஞூ ஐப்பசி மீ 16 உ. செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1409 ற. அவ்வல் பிறை 20 ( 01 - 11 - 1988 ) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 224

2 ஆயிரம் ரூபா நிவாரணக்கொடுப்பனவு:

# முதற் கட்டமாக ரூ.1,000 மட்டும்

## அதுவும் முன்னுரிமை அடிப்படையில் தெரிவானோருக்கே கிடைக்கும்

யாழ்ப்பாணம் நவம்பர் 1

இடம்பெயர்ந்த குடும்பங்கள் மீளக் குடியமர்த்தலுக்கான இரண்டாயிரம் ரூபா நிவாரணப் பணத்தில் முதற் கட்டமாக ஆயிரம் ரூபாவே வழங்கப்படும்.

போதிய நிதிஒதுக்கீடு கிடைக்கப்பெற்ற பின்பே மிகுதி ஆயிரம் ரூபா வழங்கப்படும்.

அதுவும் மிகவும் பாதிக்கப்பட்ட பகுதி என முன்னுரிமை அடிப்படையில் உதவி அரசாங்க அதிபர்களினல் சமர்ப்பிக்கப்படும் பட்டியலின் ஒழுங்கின்படியே இந்த நிவாரணம் வழங்கப்படும்.

யாழ் அரசாங்க அதிபர் திரு. வை. மு. பஞ்சலிங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

யாழ் மாவட்டத்தில் மேற்படி நிவாரணத்தைப் பெறுவதற்கு விண்ணப்பித்தவர்கள் அனைவருக்கும் அதனை வழங்குவதற்கு ரூபா 36 கோடி தேவையென மதிப்பிடப் பட்டுள்ளது.

ஆனல் தற்போது ஏழரைக்கோடி ரூபா மட்டுமே அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

கிடைக்கப்பெற்ற நிதியைக்கொண்டு உதவி அரசாங்க அதிபர்களினல் தயாரிக்கப்பட்ட முன்னுரிமைப் பட்டியல் அடிப்படையில் ஆயிரம் ரூபா நிவாரணமாக வழங்கும் வேலைகள் நேற்று ஆரம்பமாகின.

அனுமதிக்கப்பட்ட விண்ணப்பங்கள் அட்டவணைப்படுத்தப்பட்டு காசோலைகளுடன் வங்கிகளுக்குக் கொடுப்பன

(6 ஆம் பக்கம் பார்க்க)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற் பொறுப்பாளர்

## மட்டக்களப்பு பிரான்ஸிஸ் கொலையுண்டதாக அறிவிப்பு

கொழும்பு, நவ 1

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மட்டக்களப்பு அம்பாறைப் பிரிவு அரசியற் பொறுப்பாளர் பிரான்ஸிஸ் (இராசையா சடாட்சரபவன்) இந்திய அமைதிப்படையினரின் தேடுதல் நடவடிக்கைகளின் போது சுட்டுக் சொல்லப்பட்டதாக பி. பி. ஸியும், இந்திய வானெலியும் நேற்று அறிவித்தன.

மட்டக்களப்பில் இருந்து பதினைந்து மைல் தூரத்தில் உள்ள பெரியகல்லாறு என்னுமிடத்தில் இடம்பெற்ற தேடுதல் வேட்டையின் போதே பிரான்ஸிஸ் சுட்டுக் கொல்லப்பட்டதாக பி. பி. ஸி அறிவித்தது.

ஆனல் கோட்டைக்கல்லாறு என்னுமிடத்தில் இடம்பெற்ற சம்பவத்திலேயே பிரான்ஸிஸும் வேறு ஐவரும் உயிரிழந்ததாக இந்திய வானெலி அறிவித்தது. (உ-எ)

### சுபநேரம்

01- 11 - 1988
செவ்வாய்க்கிழமை
சுபநேரம்:-
10-34முதல் 12-04வரை
ராகுகாலம்:-
3 04முதல் 4-34வரை

## வல்வையில் ஊரடங்கு

யாழ்ப்பாணம், நவ. 1

வல்வெட்டித் துறைப் பகுதியில் நேற்றுக்காலை 6-30 மணி முதல் மாலை 4-00 மணி வரை உத்தியோகப்பற்றற்ற ஊரடங்கு அமுல் படுத்தப்பட்டது. சுற்றிவளைப்புகளும், தேடுதல்களும் மேற்கொள்ளப் பட்டன.

இதன் காரணமாக நேற்று 751. 756 இலக்க பஸ் சேவைகள் தடைப் பட்டிருந்தன.

வல்வெட்டித்துறை, பொலிகண்டி, பலாலி, உடுப்பிட்டி, கொருடாவில், மயிலியதனை போன்ற இடங்களில் ஊரடங்கு உத்தரவு அமுல் செய்யப்பட்டது.

சில இளைஞர்களும், குடும்பஸ்தர்களும் கைது செய்யப்பட்டு முகாம்களுக்கு கொண்டு செல்லப்பட்டதாக பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன. (உ-160-9)

## இந்திய விவசாயிகளின் முற்றுகை கைவிடப்பட்டது

புதுடில்லி, நவ. 1

புதுடில்லி நகரில் இந்திய விவசாயிகள் சங்கம் தனது முற்றுகையைக் கைவிட்டது.

சங்கத்தைச் சேர்ந்த சுமார் பத்தாயிரம் விவசாயிகள் கோரிக்கைகள் சிலவற்றை முன்வைத்து நாடாளுமன்றக் கட்டடத்துக்கு முன்னல் சில தினங்களாக முற்றுகை நடத்தி வந்தனர் என்பது தெரிந்ததே.

அதேவேளையில் செங்கோட்டையில் நேற்று நடந்த, மறைந்த பிரதமர் இந்திரா காந்தியின் நான்காவது நினைவுநாள் கூட்டத்தில்லட்சக்கணக்கானேர் கலந்துகொண்டதாக அறிவிக்கப்பட்டது.

கூட்டத்திற்குப் பிரதமர் ராஜீவ் காந்தி தலைமைவகித்தார். (ஓ-எ)

## வெளியூர் தபால் சேவை ஓரிரு தினங்களில் சீரடையும்

யாழ்ப்பாணம், நவ 1

வெளியூர் தபால் சேவை அடுத்தசில தினங்களில் சீரடையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது

ரயில் சேவை பாதிக்கப்பட்டதை அடுத்து தபால்சேவைகள் கடந்த 10 நாட்களாகப் பாதிக்கப்பட்டிருந்தன.

ஆனல் நேற்று முன் தினம் முதல் கொழும்பு வவுனியா ரயில் சேவை மீண்டும் ஆரம்பிக்கப் பட்டதை அடுத்து வட பகுதிகான தபால் சேவை சீரடையும் என எதிர்பார்க்கப்படுகிறது (ஓ-9)

## துணுக்காய் பகுதியில் ஹெலித் தாக்குதல்!

மாங்குளம், நவ 1

துணுக்காயில் கோட்டைகட்டியகுளம் ஐயன்குளம் ஆகிய பகுதிகளில் கடந்த சனிக்கிழமை ஹெலியிலிருந்து குண்டுத் தாக்குதல்கள் நடத்தடபட்டன

ஐந்து ஹெலிக்கொப்டர்கள் முகாமைச் சுற்றி நோட்டமிட வேறு இரு ஹெலிக்கொப்டர்கள் குண்டு மாரி பொழிந்தது.

இப் பகுதிக் காடுகளில் போராளிகளின் முகாம்கள் இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரிலேயே இத் தாக்குதல் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது. துணுக்காய் இராணுவ முகாமிலிருந்து ஷெல் தாக்குதல்களும் நடைபெற்றன. இதனல் மக்கள் பீதியுடன் காணப்படுகின்றனர்.

இதனிடையில் கடந்த வியாழக்கிழமை மாங்குளத்தில் லொறி ஒன்று தீக்கிரையாக்கப்பட்டதை அடுத்து பாதுகாப்பு மேலும் பலப் படுத்தப்பட்டுள்ளது. (ஓ-94)

### தொலைபேசி சீரடைந்தது

யாழ்ப்பாணம் நவ 1

யாழ் - கொழும்பு தொலைபேசிச் சேவை நேற்று நண்பகல் முதல் மீண்டும் இயங்க ஆரம்பித்தது.

யாழ். பிரதம தபாலகத்தில் உள்ள தொலைபேசி இணைப்பு ஒன்றும், சுண்டுக்குளி தபாலக இணைப்புகளும் நேற்று முதல் மீண்டும் இயங்க ஆரம்பித்தன. (ஓ-9)

### முச்சந்தி முரளி



உது எத்தனை நாளைக்கு சரியா வேலை செய்யிது எண்டு பார்ப்பம் ... ...! திரும்பவும் இரண்டு நாளிலை தொலைபேசி தொல்லைபேசியா மாறுட்டிச் சரி ... ...!

## ஐ.தே.க, சு. கவுக்கு தடை விதித்து சுவரொட்டி

கொழும்பு நவ 1

ஐக்கிய தேசியக கட்சி, ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சி ஆகியன தேர்தல் பிரசாரங்களில்ஈடுபடக்கூடாது என்று தெரிவிக்கும் சுவரொட்டிகள்மாத்தறைப் பகுதியில் ஒட்டப்பட்டுள்ளன:

சில அரசியல் கட்சிகளுக்குத் தடை விதிக்கப் பட்டதாகக் கூறப்படும் சுவரொட்டிகள் கொழும்பு மாநகரின் சில இடங்களிலும் ஒட்டப்பட்டுள்ளன என்றும் செய்திகள் தெரிவித்தன (உ-எ)

## மாணவர்கள் கல்வீச்சில் ரயில்வே ஊழியர் பலி!

கொழும்பு, நவ 1

மீரிகமவில் மாணவர்கள் கும்பல் ஒன்று நடத்திய கல்வீச்சில ரயில்வே ஊழியர் ஒருவர் உயிரிழந்தார்.

மீரிகம டி. எஸ். சேனநாயக்கா மகாவித்தியாலயத்தின்சிரேஷ்டமாணவர்களைக்கொண்ட குழு ஒன்றே அப்பகுதியினல் போக்குவரத்தில் ஈடுபட்ட பஸ், ரயில் போன்ற வாகனங்கள் மீது கல் வீசியதாகக் கூறப்படுகிறது

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலீஸார் 20 மாணவர்களைக் கைதுசெய்து விசாரணை செய்துவருகின்றனர். (உ)

### சூட்டுக்குப் பலி!

யாழ்ப்பாணம், நவ 1

கடந்த ஞாயிற்றுக்கிழமை அச்சுவேலிப் பகுதியில் படையினரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டது.

உயிரிழந்தவரிடமிருந்து கைத்துப்பாக்கி ஒன்றும் கைப்பற்றப்பட்டதாகத் தெரியவருகிறது. (உ-9)

கருதினலின் இறுதிச் சடங்கு:

## யாழ். ஆயர் குழுவினர் தேவத்தை செல்வர்

யாழ்ப்பாணம், நவ 1

கருதினல் தோமஸ் கூரேயின் இறுதிச் சடங்குகளில் கலந்துகொள்ள யாழ் ஆயர் வண பிதா தியோகுப்பிள்ளை ஆண்டகை தலைமையிலான குழு ஒன்று செல்லவுள்ளது.

கருதினல் தோமஸ் கூரே கடந்த 29 ஆம் திகதி சனிக்கிழமை இரவு காலமானர். அன்னரின இறுதிச் சடங்குகள் வியாழக்கிழமை தேவத்தையில் நடைபெறவுள்ளன.

இறுதிச் சடங்கில் யாழ் ஆயர் தமிழில் பிரசங்கம் நிகழ்த்துவார். (ஓ-5)

நிர்வாகத்தின் நடவடிக்கைகளை ஆட்சேபித்து

## கிழக்கிலங்கை பல்கலைக்கழக மாணவர் உண்ணுவிரதம்

யாழ்ப்பாணம் நவ 1

நிர்வாகத்தின் நடவடிக்கைகளை ஆட்சேபித்து கிழக்கிலங்கைப் பல்கலைக்கழக மாணவர்கள் உண்ணுவிரதப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

மாணவர்களின் பல பிரச்சினைகள் குறித்து நிர்வாகத்துடன் பலதடவைகள் பேச்சு நடத்தியும் எதுவித பயனும் ஏற்படாததன் காரணமாகவே இந்த உண்ணுவிரதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டதாக மாணவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

★தவிர்க்க முடியாத காரணங்களுக்கு 80 வீத வரவை பரீட்சைக்குக் கணிப்பதை நிறுத்த வேண்டும்.

★பரீட்சைகளில் சித்தியடையத் தவறும் மாணவர்களுக்குப் பரீட்சை முடிவு வெளியாகி 40 நாட்களுக்குள் மீள்பரீட்சை நடத்தப் படவேண்டும்.

★சகல மாணவர்களுக்கும் உரிய பரீட்சைகளை குறிப்பிட்ட கால அவகாசம் தந்து நடத்த வேண்டும்.

★பல்கலைக்கழக கலை, வர்த்தக பிரிவிலுள்ள மாணவர்கள் தற்போது எதிர்நோக்கும் பலபிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் விரைவில் எடுக்கப்படுமென்று உறுதி அளிக்கப்பட வேண்டும்.

—மேற்கண்ட கோரிக்கைகளை முன் வைத்தே உண்ணுவிரதம் நடைபெறறுவருகிறது. (ஓ-10)

### பருத்தித்துறையில் இளைஞர் கொலை!

வடமராட்சி, நவ 1

பருத்தித்துறையில் நேறறு முன் தினம் இரவு இளைஞர் ஒருவர் சுட்டுக் கொலை செய்யப் பட்டார்.

பருத்தித்துறை சந்தை வீதியைச் சேர்ந்த 27 வயதுடைய கிருஷ்ணப் பிள்ளை தனபாலா (தனம்) என்பவரே கொலையுண்டவராவர். (ஓ-160)

## கைதடியில் தேடுதல்; போக்குவரத்து தடை

யாழ்ப்பாணம். நவ 1

கைதடிப் பகுதியில் நேற்று உத்தியோகப்பற்றற்ற ஊரடங்கு அமுல் செய்யப்பட்டு தேடுதல்கள் மேற்கொள்ளப் பட்டன.

இதன் காரணமாக நேற்று கைதடிப் பகுதியினூடாகப் போக்குவரத்துகள் தடைப்பட்டன.

வாகனங்கள் நச்சன் தோப்பு, கேரதீவு வீதி ஊடாக சேவையில் ஈடுபட்டன. நண்பகலுடன் நிலைமை வழமைக்குத் திரும்பியது (ஓ-9)

## நகரில் இளைஞர் கொலை

குருநகர், நவ 1

யாழ்-பண்டி வீதி பஸ் தியன் சந்தியில் இளைஞர் ஒருவர் நேற்றுக்காலை 5 30 மணியளவில் சுட்டுக்கொல்லப்பட்டார்.

கச்சேரியடியைச் சேர்ந்த அல்பேட் அமரேஸ் அரியராசா என்பவரே உயிரிழந்தவராவார்.

இதனிடையில் நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் யாழ்- பிரதான வீதியில் மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் தப்பி ஓடி விட்டதாகவும் அறியப்படுகிறது (ஓ-51)

### பஸ் விபத்தில் பயணிகள் 12 பேர் பலி

இஸ்லாமபாத் நவ 1

இஸ்லாமபாத்தின் வடக்கே பயணிகள் பஸ் ஒன்று விபத்துக்குள்ளாகியதில்12 பேர் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப் படுகிறது (ஓ-எ)

# படுமோசமான நிலையில் நாட்டின் பொருளாதாரம்

## உலகவங்கி ஆண்டறிக்கையில் தகவல்

யாழ்ப்பாணம், நவ 1

இலங்கையின் பொருளாதார நிலைமை முன்னெப்போதும் இல்லாதவாறு பெரும் பாதிப்புக்குள்ளாகியிருக்கிறது.

இலங்கைச் சரித்திரத்தில் அதன் பொருளாதாரம் இந்த விதமாக படுமோசமான முறையில் எந்தவொரு காலத்திலும் பாதிக்கப்படவில்லை.

உலக வங்கி வெளியிட்டிருக்கும் அதன் ஆண்டறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

1983-ஆம் ஆண்டுக்குப் பிறகு இலங்கையில் இடம்பெற்ற இனக்கலவரங்களையடுத்தே இலங்கையின் பொருளாதார நிலையில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டது

பெருமளவு ஆயுதக் கொள்வனவு, பாதுகாப்புப் படைகளுக்கு கூடுதலான ஆட்சேர்ப்பு, பாதுகாப்புப்படைகளின் நிர்வாகச் செலவு அதிகரிப்பு ஆகியவை இலங்கையின்செலவினத்தில் பெரும் பகுதியை ஆக்கிரமித்துக் கொண்டுள்ளன.

அரசாங்க நிறுவனங்களில் திட்டமிடாத முதலீடுகள், அரசாங்க நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றின் நிதி நிர்வாகச் சீர்கேடு

(6 ஆம் பக்கம் பார்க்க)

### அம்பாறையில் தேடுதல் தீவிரம்

கொழும்பு, நவ 1

அம்பாறை மாவட்டத்தில் இந்திய அமைதிப் படை தனது தேடுதல் நடவடிக்கையை தீவிரப் படுத்தியிருப்பதாக அறிவிக்கப்பட்டது (ஓ-எ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனை

நஷனல் கசற் றேடியோ 125W. ஒன்வுட் ஸ்ரிறியோ அம்பிளிவயர் 420W, ஸ்கூட்டர் (லம்பிறற்ரா இத்தாலி) இவை விற்பனைக்கு உண்டு. உடன் தொடர்பு கொள்ளவும்: 111, அம்பலவாணர் றோட், அத்தியடி. (7680)

Honda M. 8. 5 சிவப்பு Chaly வெள்ளை ஆகிய இரண்டு Motor Cycles விற்பனைக்குண்டு. தொடர்பு: லால் 116, வேம்படி வீதி, யாழ்ப்பாணம். (7647)

நல்ல நிலையில் உள்ள அலுமினிய தகரங்கள், கதவு, நிலை, யன்னல்கள் கராச் கதவுகள், இரும்புக் கதவுகள் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: சகலக்கு மிஸ்ரோர், மாட்டின் றோட், யாழ்ப்பாணம். (7640)

உங்கள் உணவின் சுவையை மேலும் ருசியூட்ட வட இந்திய முறைப்படி தயாரிக்கப்பட்ட 'வெள்ளைப் பூடு ஊறுகாய்' (Garlic Pickle) விற்பனைக்கு உண்டு. 300G போத்தல் 27/50 மட்டுமே வியாபாரிகளுக்கு விஷேச கழிவு உண்டு M G M & Stores, 777 K.K S Rd, Jaffna (7636)

## கோழிக்குஞ்சு விநியோகம

ஒரு நாள் Hyline வெள்ளை, கறுப்பு பேட்டுக் குஞ்சுகள் 01-11-88 இல் விநியோகிக்கப்படும். மற்றும் 1 கிழமை "Christombv" பாம் புறொயிலர் குஞ்சுகள் கையிருப்பில் உள்ளன. பதிவு செய்யாதவர்கள் உடன் பதிவு செய்யவும். A. J S பாம் No 45 கொழும்புத்துறை வீதி. (சந்தனமாதா கோயில் அருகாமை) சுண்டிக்குளி யாழ்ப்பாணம். (7648)

Hisex Golden Comet பிறவுண் சேவற் குஞ்சுகள். பேட்டுக் குஞ்சுகள், Hyline வெள்ளைகறுப்பு பேட்டுக் குஞ்சுகள், கறுப்பு சேவற் குஞ்சுகள், புறொயிலர் குஞ்சுகள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் விநியோகிக்கப்படும் முன் கூட்டிப் பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம் சற்குணராஜா & பிறதர்ஸ் பிரம்படி லேன், கொக்குவில். (7249)

பிறிமா இன சிவப்பு, வெள்ளை ஒரு நாள் பேட்டுக் குஞ்சும் புறொயிலர் மற்றும் சேவல் குஞ்சுகளும் 30-10-88 இல் இருந்து விநியோகிக்கப்படுகிறது. தேவைப்படுவோர் உடன் வாவும். M G.M Forage Stores. 208, 1st Cross St, Jaffna. (7635)

## றேடியோ

தரமான றேடியோ பிரதிகளை (தமிழ்/ஆங்கிலம்) சிறந்த முறையில் குறித்த தவணையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம். "ஷப்ரூ" சேவைப் பிரிவு, இல: 19 2ஆம் ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் (C/692

## SPOKEN ENGLISH

புதிய பிரிவு தூர இடங்களில் இருந்து வருபவர்களுக்காக ஆரம்பம்: 03-11-88 நேரம் பகல் 10-30, 12-30 செவ்வாய், வியாழன் நாட்களில் மட்டும் S B. Iyar 12, வைமன் வீதி, நல்லூர். (7439

## O/L ENGLISH

பழைய பாடத்திட்டத்திற்கமைய ஒருமாதகால (Paper Class) பயிற்சி வகுப்பு ஆரம்பம்: 03-11-88 தொடர்பு S B. Iyar 12 வைமன் வீதி, நல்லூர் (7438)

## விசேட பயிற்சி வகுப்புக்கள்

Radio T V Deck வயறிங், பிளம்பிங், குளிர்சாதனவியல் (A/C) றீவைண்டிங், வெல்டிங், மோட்டோ மெக்கானிசம் கட்டடப்படம் வரைதல் ஆகிய வகுப்புக்கள் 5-11-88(சனி) காலை 9 30 மணிக்கு ஆரம்பமாகும். Audio Video Electronic வகுப்புக்களும் நடைபெறுகின்றன. தொடர்பு: Nesta Technical Institute 59, Station Road Jaffna (7670)

## தவறிவிட்டது

ஒருசிறப்புக் கோர்வை சுஜாத்தா ஜுவலர்ஸ் (கொழும்பு) Key Tach உடன் வினசர் தியேட்டருக்குள் தவறிவிட்டது. இதைக் கண்டு எடுத்தவர்கள் தயவு செய்து பாரத் ஸ்ரூடியோவில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (7684)

பிரமநாயகம் சந்தன முத்துச்சாமி 41307129X தேவாம்பிகை, 486801700V ஆகிய இரு அடையாள அட்டைகள் வெள்ளிக்கிழமை நல்லூர் கோயிலடியில் தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (7644)

## விற்பனைக்கு உண்டு

1½ வயது நிரம்பிய பொமனறியன் (Pomanarion) ஆண்நாய் விற்பனைக்கு உண்டு Light Brown Colour தொடர்பு; 16/2 சீனியர் லேன், கலட்டி யாழ்ப்பாணம். (இராமநாதன் வீதிக்கு அருகாமையில்) (7673)

## தீபாவளி மலிவு விற்பனை

அரிய சந்தர்ப்பம்! தவற விடாதீர்கள்!! (1-11-88 — 9-11-88) வரை புதிய டிசைன் ஸ்கேட், பிளவுஸ், பேபி சூட், கவுன்கள் பெரியோர், சிறுவர்களுக்குரிய ரெடிமெட் ஆடைகள் Fashion Garments 20 22, கடைச்சாமி வீதி, (Off Navalar Road) யாழ்ப்பாணம் (7682)

## மலிவு விற்பனை

முற்றிலும் புதிய டிசைன்களில் உருவான தீபாவளி வாழ்த்து மடல்கள் குறைந்த விலையில் விற்பனைக்கு உண்டு. வியாபாரிகளுக்கு விசேட கழிவு. பார்வையிடவும் கொள்வனவு செய்யவும் மக்மிலன் புத்தகசாலை, ஆஸ்பத்திரி வீதி. பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (7601)

## தீபாவளி பிறந்தநாள் வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள், (Printing Cards), திருமண வாழ்த்துகள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், தீபாவளி, நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேடகழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அரஸ் ஜவுளியகம் 146, நவீன சந்தை யாழ்ப்பாணம் (C 357)

## கோழிக்குஞ்சு விநியோகம்

ஒரு மாத Hyline கறுப்பு பேடு, Golden Comet பிறவுண் பேடு உடன் விற்பனைக்குண்டு. உடன் தொடர்பு கொள்ளவும் ஒரு நாள் Hyline Golden Comet பேடுகளுக்கான ஓடர் ஏற்றுக் கொள்ளப்படும். Golden Farm House, பிரதான வீதி, பருத்தித்துறை. (7599)

## தேவை

யாழ் நகரிலுள்ள லேத வேலைத்தளத்திற்கு அனுபவமுள்ள ஓட்டுனர் உடன் தேவை தகுதிக் கேற்ற சம்பளம் வழங்கப்படும். 341, மே/பா உதயன். (7643)

## உடன் தேவை

பேக்கறி வேலை தெரிந்தவர்கள் உடன் தேவை. சம்பளம் நாளாந்த நேர வேலை ரூபா 40/- முதல் 50/- வரை. தொடர்பு கொள்ளவும் சோதி பேக்கவுஸ் பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு. (7646)

## மணமகன் தேவை

சுயமாக விவசாயம் செய்யும் திருமணமாகாத பண்பு நிறைந்த தாழ்த்தப்பட்ட குலத்தைச் சேர்ந்த 37 வயதுடைய ஆண்மகனுக்கு நற்பண்புள்ள 30 வயதிற்குட்பட்ட மணப்பெண் தேவை சமயம் சீதனம் எதிர்பார்க்கப்பட மாட்டாது. புகைப்படத்துடனும் விபரங்களுடனும் தொடர்பு கொள்ளவும். 342, C/o உதயன் (7645)

## மணப்பெண்கள் தேவை

யாழ்ப்பாணம் இந்து வேளாள 34 வயதுள்ள B. Sc ஆசிரியருக்கு பட்டதாரி மணப்பெண்ணும் மாதம் 1000/ பெறும் 36 வயதுள்ள Business மணமகனுக்கும் ஓமானில் நிரந்தர உத்தியோகமுள்ள 33 வயது மணமகனுக்கும் அழகிய மணப்பெண்கள் தேவை. மங்கள ஏஜென்சி கொய்யாத்தோட்டம். யாழ்ப்பாணம். (7683)

## சேவை

தமிழ், ஆங்கில தட்டச்சு வேலைகளை சிறந்த முறையில் குறித்த தவணையில் பெற்றுக்கொள்ளவும். எலக்ரோனிக் ரைப்பிங் மூலம் வெளிநாட்டு கடிதங்கள் Bio-Data போன்ற முக்கிய பிரதிகள் கண்ணைக் கவரக்கூடிய ஆங்கில எழுத்துக்கள் மூலம் செய்து கொடுக்கப்படும் 'ஷப்ரூ' சேவை பிரிவு. இல. 19 2ஆம் ஒழுங்கை, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம். (C/691)

# காங்கேசன் தெற்கு குறைபாடுகள் நீங்கும்

## பிரதேச சபை ஆணையாளர் உறுதி

காங்கேசன்துறை நவ-1

காங்கேசன் துறை தெற்கு கிராம சேவகர் பகுதியில் நிலவும் சீர்கேடுகளை நிவர்த்தி செய்வதாக வலி வடக்கு பிரதேசசபை ஆணையாளர் திரு பி பாலசிங்கம் உறுதியளித்துள்ளார்.

காங்கேசன் துறை தெற்கு பிரஜைகள் குழு, ஆணையாளரைச் சந்தித்து இப்பகுதியில் நிலவும் மின்சார சீர்கேடு, வீதிகளின் அவலநிலை கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லை போன்ற பல்வேறு விடயங்களை எடுத்துக் கூறியது

இதை அடுத்து பின்வரும் செயற்பாடுகளை மேற்கொள்ள ஆணையாளர் உறுதி அளித்தார்:

★ விவசாயத்தைபாதிக்கும் கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்தவும், சொறி, குட்டை பிடித்த நாய்களை அழிக்கவும் ஏறபாடு செய்தல்; மாடுகளுக்கு கோமாரி தடுப்பூசி ஏற்றவும் ஏற்பாடு செய்தல்.

★ இடந்தரை ஒழுங்கையில் உள்ளபழுதான மின் கம்பங்களை மாற்றுதல் வீமன்காமம் பகுதியில் மின்விநியோகத்தை சீர் செய்தல்.

★ இராணுவ நடவடிக்கை காரணமாக காங்கேசன்துறை மயானத்தை பொதுமக்கள் உபயோகிக்க முடியாமல் உள்ளது. ஆகவே அதற்குப் பதிலாக மைலப்பை மயானத்தை உபயோகிக்க வசதி செய்து கொடுத்தல். (இ68)

# தமிழோசை வெளியீட்டு விழா

யாழ். பல்கலைக்கழக தமிழ் மன்றத்தின் 'தமிழோசை 1987' வெளியீட்டு விழா 2 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3-15 மணிக்கு நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் தமிழ் மன்றத் தலைவர் திரு செ. சந்திரன் தலைமையில் இவ்விழா நடைபெறும்.

பேராசிரியர் நா. பாலக்கிருஷ்ணன் தலைமையுரை நிகழ்த்துவார். செல்வி சு சுகந்தி வரவேற்புரையையும், பேராசிரியர் அ துரைராசா ஆசியுரையையும் நிகழ்த்துவார்கள் (இ-18)



(C 712)

# நியாய விலையில் பம்பாய் வெங்காய விதை

அராலி, நவ. 1

அராலி விவசாயிகளுக்கு 1989ஆம் ஆண்டு உற்பத்திக்குத் தேவையான ராம்பூர் றெட் இன பம்பாய் வெங்காய விதையை நேரடியாக இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்து நியாய விலையில் விற்பனை செய்வதற்கு விவசாய ஆராய்ச்சிப் பகுதியும் பம்பாய் வெங்காய உற்பத்தியாளர் சங்கத் தலைவர் திரு நா. குகராசாவும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

அடுத்த போகத்தில் உற்பத்திக்கு ராம்பூர் றெட் விதை தேவையான விவசாயிகளின் விபரங்களை அராலி கமநலசேவைகள் உப அலுவலகத்தில் வைகது அராலி தெற்கு பயிர்ச் செய்கை உத்தியோகத்தர் பதிவு செய்து வருகிறார். (ச-12)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டியும்



திருமதி பூபதி நாகலிங்கம்

தோற்றம்: 16-10-1916 மறைவு: 02-10 1988

எங்கள் அனைவரது உள்ளத்தில் என்றும் நீங்காது இருக்கும் அன்புத்தெய்வமே நீங்கள் எம்மை விட்டுப்பிரிந்தாலும் உங்கள் நினைவு எம்மை விட்டு நீங்காது. உங்கள் ஆத்மாசாந்தி பெற இறைவனை வேண்டுகின்றோம் இவரின் பிரிவால்வாடி நிற்கும்.

அன்புப்பிள்ளைகள்:
திருமதி க புஸ்பமணி
திருமதி த. இந்திராணி

மருமக்கள்:
ம. கந்தையா
இ. தங்கராசா (கனடா)

பேரப்பிள்ளைகள்:
த. சுகிர்லதா, க. புஸ்பராஜா, த சுபாஜினி, க. சனகராஜா (பிரான்ஸ்), த. சுதாகரன், க. விஷயருணி, த. [illegible] (7681)

# O/L மாணவர்களுக்கு மீண்டும் ஓர் அரிய சந்தர்ப்பம்!

## G. C. E. [O/L]-1988 December PRACTICE EXAM

# இலவசம்!

சென்ற ஆண்டு G C. E O/L) மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சையை எமது நிறுவனம் மட்டுமே இலவசமாக நடாத்தியது மாணவர்கள் அறிந்ததே.

இம் முறையும் O/L மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சையை மாணவர்கள் நலன் கருதி நடாத்த இருப்பதால் எவ்வித கட்டணமும் அறவிடப்படமாட்டாது என்பதை அறியத் தருகின்றோம். பரீட்சைக்கான விடைத்தாள்களும் இலவசமாக வழங்கப்படும்!

இம் முறை கணிதம், விஞ்ஞானம் ஆகிய இரண்டு பாடங்களில் மட்டுமே பரீட்சை நடாத்தப்படும். குறுகிய காலத்தில் முழுப்பாடங்களிலும் பரீட்சை நடாத்த முடியாததை யிட்டு வருந்துகின்றோம். அரசாங்க இறுதிப் பரீட்சை பிற்போடப்பட்டால் ஏனைய பாடங்கள் அனைத்திலும் பரீட்சை நடாத்தப்படும் என்பதை மாணவர்களுக்கு அறியத் தருகின்றோம் அதற்கான திகதியும் பின்னர் அறிவிக்கப்படும்.

★ G. C. E, (O/L) December க்கு பழைய/புதிய பாடத்திட்டங்களில் தோற்ற இருக்கும் சகல மாணவர்களும் இப் பரீட்சையில் தோற்றலாம்.

★ பரீட்சைக்கான நிலையங்களும் திகதியும் பின்னர் அறிவிக்கப்படும்

★ இப் பரீட்சையை நடாத்த விரும்பும் ஏனைய நிறுவனங்களும், பாடசாலைகளும் எம்மிடம் தொடர்பு கொள்ளவும் சென்ற முறை எமது பரீட்சையை நடாத்திய பாடசாலைகளுக்கும் நிறுவனங்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்

★ பரீட்சைக்கு 10 11-88 க்கு முன்னர் எமது நிறுவனத்தில் பதிவு செய்து அதற்கான அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்ளவும் பதிவு செய்ய வரும் பொழுது அடையாள அட்டையை தவறாமல் கொண்டு வரவும் தாமதமாக வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

★ மாணவச் செல்வங்களுக்கு இந்தப் பரீட்சை ஓர் வழிகாட்டியாக அமையும் என நாம் நம்புகின்றோம்.

Do will at our Practice Exam and be Ready for the Final Exam

FREE EXAMINATION UXI

VICKNA TUITION CENTRE

52, Stanley Road, JAFFNA.

(C 714)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## திருமதி மயூரகிரிநாதன் இந்துமதி

மலர்வு: 05-08-1955
உதிர்வு: 14-11-1987

நீங்கள் இறைவனடி சேர்ந்து ஓராண்டென்ன ஓராயிரம் ஆண்டுகள் போனாலும் எம் துயரம் எம்மைவிட்டு அகலாது. அன்பிற்கும் பண்பிற்கும் வாழ்வுக்கும் வழிகாட்டியாய் இருந்து உற்றார் உறவினர் உள்ளத்தில் நிலையாய் இடம்பிடித்து விட்டீர்கள் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் உங்கள் பிரிவால் வாடும்.

அன்புக் கணவர், பிள்ளை, தந்தை, தாய், மாமி, சகோதரர்கள், மைத்துனர், மைத்துனிமார்.

பி கு. அன்னாரது வீட்டில் இன்று நடைபெறும் ஆண்டுத் திவசத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் வேண்டுகின்றோம்.

கரம்பன் கிழக்கு,
ஊர்காவற்றுறை. (7852)

# 3ஆம் மாத நினைவஞ்சலி



## தமாரு செல்வராஜா

(ஊறணி வைத்தியசாலை ஆணதாதி)

மலர்வு: 14-10-1941
உதிர்வு: 04-08-1988

நாளும் எங்களுடன் அன்பாகப் பழகியின்று
வாழும் உலகைவிட்டு வானுலகம் செல்வதற்கு
ஏன்தான் இசைந்தாயோ எங்கள் செல்வராசாவே
தாங்காது எந்நாளும் தவிக்கின்றோம் உன்னையெண்ணி

எங்களை நீ பிரிந்து எத்தனை நாள் சென்றாலும்
உங்களின் அன்பு முகம் ஒருபோதும் மறக்காது
அன்பான உங்களது ஆத்மா அமைதிபெற
எந்நாளும் இறைவனை நாம் இறைஞ்சிய நிற்கின்றோம்

அமரர் செல்வாவின் இழப்பால் வாடும்:
மனைவி, சகோதரர்கள், உறவினர்கள்.

உடுப்பிட்டி. (7678)

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 1913-09-29
இறப்பு: 1985-11-05
திதி: 1988 — 11 — 01

## திருமதி சிவபாக்கியம் ஞானப்பிரகாசம்

எங்களையெல்லாம் மீளாத்துயரில் ஆழ்த்தி எங்களைப் பிரிந்து மூன்றாண்டுகளானாலும் என்றும் உங்கள் நினைவுடனே வாழும்

மகன், சகோதரன், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

'சணிகை'
செபமியன் ஒழுங்கை,
கொக்குவில் (7597)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கான

## கம்பியூட்டர் கல்வி

**Computer Programming and Data Processing in Basic Language**

கட்டணம்: 950/-
(இரு பகுதிகளாகச் செலுத்தலாம்)

பயிற்சிக் காலம்: 2 மாதம்

ஆரம்பம்: **5- 11- 88**

(சனி, ஞாயிறு வகுப்புகள்)

O/L படித்த இருபாலாரும் சேரலாம். குளிரூட்டப்பட்ட அறையில் கூடிய நேர செய்முறைப் பயிற்சி IBM Comp tible) கம்பியூட்டரில் வழங்கப்படும் பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

**UNIKCO COMPUTER CENTRE**

No. 5, மின்சார நிலைய வீதி,
2 ஆம் ஒழுங்கை
யாழ்ப்பாணம்.
(உப தபாற் கந்தோர் அருகாமை)

(C/708)



## சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்.

1988ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10ஆம் திகதி காலை 10-00 மணி வரை சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர் அவர்களால் கீழே குறிப்பிட்ட கட்டிட வேலைக்கு ரூபா 250 000/-க்கு மேற்பட்ட தொகைக்கு பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரிடமிருந்து சீல் வைத்த கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய மறுதினம் (11-11 88) காலை 10-30 மணியளவில் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். அத்தருணம் ஒப்பந்தக்காரரோ அல்லது அவரது பிரதிநிதிகளோ சமுகம் அளிக்கலாம்.

இவ்வேலை செய்ய விரும்புவோர் எவரும் அரச கும வேலை ஒப்பந்தக்காரராகவோ அல்லது உள்ளூராட்சி ஆணையாளரினால் அல்லது கூட்டுறவு உதவியாளரினால் அங்கீகரிக்கப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

இக்கட்டிட வேலை செய்ய விரும்புவோர் 1988ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 9ஆம் திகதி காலை 10-30 மணி வரை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் பணிமனையிலிருந்து கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். திரும்பப் பெறக்கூடிய வைப்புப்பணமாக ரூபா 250/-ம் திரும்பப் பெறமுடியாத பணமாக ரூபா 25/-ம் செலுத்தி கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

**கிராமோதய சுகாதார நிலையம்**

**கிளிநொச்சி மாவட்டம் — 3 கட்டிடங்கள்**

(1) இராமநாதபுரம்
(2) பல்லவராயன்கட்டு
(3) பாரதிபுரம் (ஆலடிச் சந்தி)

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்ட பின் கடித உறையில் அடைக்கப்பட்டு பெயருடன் சீல் வைப்பதுடன் கடித உறையின் இடது பக்க மூலையில் 'சுகாதாரப் பகுதியின் கட்டிட வேலை' என்று குறிப்பிட்டு மேற்கூறிய திகதிக்கு முன் இப் பணிமனையில் கிடைக்கத்தக்கதாக அனுப்ப வேண்டும் அல்லது இப்பணிமனையில் வைக்கப்பட்டிருக்கும் பெட்டியில் போடப்பட வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர்கள் அவர்களுடைய கேள்விகள் ஏற்கப்பட்டதை அறிவித்தல் கிடைத்தவுடன் ஒரு வார காலத்திற்குள் நியமிக்கப்பட்ட வைப்புப் பணத்தைச் செலுத்துவதுடன் இதற்கான ஒப்பந்தத்திற்கும் உடன்படல் வேண்டும் அவ்வாறு செய்யத் தவறின் அவரது கேள்வி இரத்துச் செய்யப்படலாம்.

தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர்கள், ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்வித் தொகையின் 5% ஒப்பந்தத்தின்படி வேலையைத் திருப்திகரமாகச் செய்து முடிக்க பிணைப்பணமாக யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் நியமிக்கும் வங்கியில் கட்ட வேண்டும். வேலை திருப்திகரமாக முடிந்த பின் இப்பணம் திருப்பிக்கொடுக்கப்படும்.

கேள்வி விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளுதல் எதையாவதை நிராகரித்தல் அல்லது முழுதாக நிராகரித்தல் ஆகிய உரிமைக்கும் அனைத்துத் தீர்மானங்கள், இறுதி முடிவுகள் யாவும் கேள்விச் சபைத் தலைவரைச் சார்ந்தது.

சுகாதார சேவைகள்
பிராந்தியப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

26-10-1988.    (C 696)


ரூ. 2000 நிவாரணத்தில்

# வலி. வடக்கு மக்களுக்கு முன்னுரிமை வேண்டும்

## பிரஜைகள் குழுக்களின் ஒன்றியம் கோரிக்கை

காங்கேசன்துறை, நவ 1

வலி. வடக்குப் பகுதி மக்கள் இராணுவ நடவடிக்கைகளால் பெரிதும் பாதிக்கப்பட்டு தமது இருப்பிடங்களையும், உடமைகளையும் இழந்து நிர்க்கதி நிலையில் உள்ளனர் ஆகவே இடம் பெயர்ந்தருக்கு வழங்கப்படும் 2000 ரூபா நிவாரண உதவியை வலி வடக்கில் உள்ள சகல மக்களுக்கும் முன்னுரிமை கொடுத்து வழங்க ஆவன செய்ய வேண்டும்

வலி வடக்கு பிரஜைகள் குழுக்களின் ஒன்றியம் புனர்வாழ்வு அமைச்சின் செயலாளரையும், யாழ். அரசாங்க அதிபரையும் மேற்கண்டவாறு கோரியுள்ளது

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்க மண்டபத்தில் ஒன்றியத்தின் தலைவர் சட்டத்தரணி வி. எஸ் கணேசலிங்கம் தலைமையில் ஒன்றியத்தின் கூட்டம் நடைபெற்றது

கூட்டத்திலேயே மேற்கண்டவாறு கோரும் தீர்மானம் நிறைவேறியது.

அத்தீர்மானம் மேலும் கூறுவதாவது:-

இடம் பெயர்ந்தவர்களை மீளக் குடியமர்த்த 2000 ரூபா நிவாரண உதவி வழங்க ஏற்பாடு செய்யப்படுகிறது. ஆனால் இந்த உதவி எல்லோருக்கும் ஒரே சமயத்தில் கிடைக்காமல் பகுதி பகுதியாக வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வலி வடக்குப் பகுதி மக்களைப் பொறுத்தவரை 83ஆம் ஆண்டு பலாலி விமான நிலைய விஸ்தரிப்பால் ஏராளமான குடும்பங்கள் தமது இருப்பிடங்களையும் விவசாய நிலங்களையும் விட்டு வெளியேற்றப்பட்டு அகதிகளாகின.

காங்கேசன்துறை-பலாலி வீதி இலங்கை இராணுவ உபயோகத்துக்கு கொண்டுவரப்பட்டதை அடுத்து கரையோரப் பகுதி மக்கள் ஏராளமானோர் அகதிகளாக வெளியேறினர்.

இதற்கும் மேலாக இராணுவ உத்தரவால் குரும்பசிட்டி. வசாவிளான், வீமன்காமம், மயிலிட்டி தெற்கு காங்கேசன்துறை. மாவிட்டபுரம் உட்பட மற்றும் சுற்றுடல்களைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையான மக்கள் வீடுகளையும், உடமைகளையும் விட்டு வெளியேறி இருந்தனர்.

ஏனைய பகுதிகளில் மீளக்குடியமர நிதியுதவிகள் வழங்கப்பட்ட போதும் இப்பகுதி மக்களுக்கு இதுவரை எவ்வித உதவியும் வழங்கப்படவில்லை.

ஆகவே மேற்படி 2000ரூபா நிவாரண உதவி, வலி வடக்குப் பகுதி மக்கள் அனைவருக்கும் ஒரே நேரத்தில் கிடைக்க முன்னுரிமை அடிப்படையில் ஆவன செய்ய வேண்டும்.

இப்படிக் கேட்கப்பட்டுள்ளது. (இ 68)

### கோப்பாயில் லொறி எரிப்பு

கோப்பாய், நவ. 1

கோப்பாய் வடக்கு இலகடியில் லொறி ஒன்று இனந்தெரியாதவர்களினால் தீ மூட்டிக் கொளுத்தப்பட்டது

(த 72)

### இளைஞர் மீது படையினர் சூடு

வவுனியா நவ.1

வவுனியாவைச் சேர்ந்த எல்லப்பர் மருதங்குளத்தில் சனியன்று இடம் பெற்ற தேடுதலின் போது துப்பாக்கிப் பிரயோகமும் செய்யப்பட்டது

படையினரைக் கண்டு தப்ப முயன்ற இரு இளைஞர்களை நோக்கியே துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாகவும் எனினும் அவர்கள் தப்பியோடிவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அவ்வேளை தோட்டம் ஒன்றில் வேலை செய்து கொண்டிருந்த ஒருவர் தாக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது

(ஓ-164)

## இயல் - இசை - நாடக நிகழ்ச்சிகள் விழாக்களில் இடம் பெற வேண்டும்

பாடசாலைகளில் கொண்டாடப்படும் தமிழ் தின விழாக்களில் இயல் இசை, நாடக நிகழ்ச்சிகள் கட்டாயமாக இடம் பெறவேண்டும். தமிழ் தின விழாக்களுக்கு மெருகூட்டுவதற்கு முத்தமிழில் நடைபெறும் கலை சார் நிகழ்ச்சிகள் சேர்க்கப்பட வேண்டும்''

மானிப்பாய் மகளிர் கல்லூரியில நடைபெற்ற வாணிவிழா தமிழ் தின விழவில் உரையாற்றும் பொழுது கல்லூரி அதிபர் திருமதி சரோஜினி கல்யாணசுந்தரேசன் மேற்கண்டவாறு கூறினார்.

கல்வி அதிகாரி திரு சி புலேந்திரன், இளைப்பாறிய ஆங்கில விரிவுரையாளர் திரு எஸ் கைலாசநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டனர்

திருமதி கல்யாணசுந்தரேசன் தனது உரையில் மேலும் கூறியதாவது, 'விஜயதசமி தினத்தன்று கல்லூரியில் சரஸ்வதி கடாட்சம் வேண்டி இசை ஒலிக்கப்பட வேண்டும்

நடன நிகழ்ச்சிகள் நடைபெற வேண்டும்

இந்நிகழ்ச்சிகளை எமது ஆசிரியை திருமதி லீலா செல்வராஜா சிறப்புடன் மேடையேற்றியமை பாராட்டப்பட வேண்டிய தொன்றாகும்'' எனக் கூறினார்

கல்வி அதிகாரி திரு. சி புலேந்திரன் பேசுகையில்: ''மானிப்பாய் மகளிர் கல்லூரி முத்தமிழ் வளர்ச்சிக்கு ஆற்றும் சேவையை அறியாதோர் இல்லை.

சங்கீத நடனக் கலைகள் இங்கு பயிலும் மாணவிகளோடு கூடிப்பிறந்தது என்று சொன்னால் மிகையாகாது.

நாம் பணம் செலவு செய்து சுவைக்க வேண்டிய நிகழ்ச்சிகளை இலவசமாகப் பார்த்துக் களிக்கச் சந்தர்ப்பம் கொடுத்த அதிபரை நான் பாராட்டாமல் இருக்கமுடியாது' எனக் கூறினார்.

திரு. கயிலாயநாதன் பேசுகையில், '' இங்கு நடைபெற்ற நிகழ்ச்சிகள் முதல் தரமானவை

அமைதியுடன் அமைதி போடு பார்த்துக் கொண்டிருந்த மாணவிகளின் ஒழுக்கம் இந்நிகழ்ச்சிகளிலும் பார்க்கச் சிறப்பானவை''

இப்படி அவர் கூறினார். (ச)

### புதுக்குடியிருப்பு ஆஸ்பத்திரி அவல நிலை

புதுக்குடியிருப்பு வைத்திய சாலையில் தற்போது மின் விநியோகம் தடைப்பட்டுள்ளதுடன் நோயாளர்களுக்கு வேண்டிய அத்தியாவசிய, சாதாரண மருந்து வகைகள் கூட களஞ்சியத்தில் இல்லை கடும் வரட்சியினால் கிணற்றில் நீரும் வற்றிப் போயுள்ளது.

(இ 126)


## சாவகச்சேரியில்

**Computer Programming and Data Processing in BASIC LANGUAGE**

காலம்: 3 மாதம்    Fees: 1250/-

தகைமை - G C. E (O/L)

ஆரம்பம்:- 03 - 11 - 88  9.30 a.m

**ABLE TECHNICAL STUDIES**
**SCIENCE CENTRE**
Post Office Road,
CHAVAKACHCHERI

(7562)



## வேலை வாய்ப்பு

**லிபியா:**

சாரதி HVD
சம்பளம் 8 மணித்தியாலம்
9 - 10,000 வரை

(ஓவர்ரைம்) மேலதிக வேலை அதிகம் உண்டு. பாஸ்போட், படம், வாகனசாரதி அனுமதிப் பத்திரம் ஆகியவற்றுடன் 2 - 3 நாட்களுள் தொடர்புகொள்ளவும்

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி

**கொழும்பில்**

18 1/4, முதலிகே மாவத்தை,
கொழும்பு.

**யாழ்ப்பாணம்**

ந. பாஸ்கரன் J.P
இந்திராணி ஏஜென்ஸி
நெல்லியடி,
கரவெட்டி.

(7590)



# A/L 89 PHYSICS

Tutor : R. சத்தியசீலன்

21, மணல்தரை லேன், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

Day Classes
(Mon to Fri)

★ ஒலியியல் 9 00a m-10.15 a.m, மேற்பரப்பிழுவிசை 1.30p.m-2.45p.m

ஆரம்பம் 01 - 11 - 88 செவ்வாய்]

(C706)



## முதலாவது பிறந்த தின வாழ்த்து



### ★ செல்வன் பிரதிலீப ★

ஜேர்மனியைச் சேர்ந்த லோகநாதன் ஸ்ரீரஜனி தம்பதிகளின் செல்வப் புதல்வன் பிரதிலீப் (01 - 11 - 88) தனது முதலாவது பிறந்த தினத்தை வெகு விமரிசையாக ஜேர்மனியில் கொண்டாடுகின்றார்.

இவரை ஜேர்மனியில் இருக்கும் அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, தாத்தாமார், அம்மம்மாமார் (குவைத் பெரியப்பா, பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார் மாமாமார், மாமிமார். அக்காமார் அண்ணாமார், தம்பிமார், மச்சாள்மார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் சகல செல்வங்களும் பெற்று நீடூழி வாழ மயிலணி முருகன் அருள் வேண்டி வாழ்த்துகின்றார்கள்.

(C- 694)



## மரக்கறி விதைகள்

அமோக விளைச்சலைத் தரக்கூடியதும், எமது மண் வளத்துக்குப் பொருத்தமானதுமான பலவிதமான தரமான மரக்கறி விதைகளைப் பனை அபிவிருத்திச் சபையின் சகல 'கற்பகம்' விற்பனை நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு :

**சந்தைப்படுத்தும் பிரிவு,**
(பனை அபிவிருத்திச் சபை,)
இல. 53, கண்டி வீதி,
(C-695)    யாழ்ப்பாணம்.



# சரியான நிறை தவறாது காட்டும் யூனியன் மேடைத் தராசுகளை சிங்கர் விநியோகிக்கிறது!



யூனியன். சரியான நிறையைத் தவறாது காட்டுபவை. உலகப் புகழ் வாய்ந்த சிங்கர் நிறுவனம் இந்த உன்னத தராசுகளின் ஏக விநியோகத்தைப் பொறுப்பேற்றுள்ளது.

யூனியன் 250 கிலோ மேடைத் தராசுகள் இப்பொழுது மேலும் நவீனத்துவம் பெற்றுள்ளன. வெப்பத்திற்குத் தாக்குப் பிடிக்கும் நுட்ப உறுப்புகளும் நீண்ட காலம் உழைக்கும் திறனும் கொண்ட அவை இலங்கை அளவை நிறுவைப் பணியகத்தின் அனுமதி முத்திரையைப் பெற்றவை.

சகல சிங்கர் விற்பனை நிலையங்களிலும் வாங்கலாம்.

எடை அளவெல்லை
அளவுத் திறன் 250 கி.கி. அளவுக் கூறுகள் 10 கி. கி x 100 கி.

நீங்கள் தவணைக்கொடுப்பனவு அடிப்படையிலும் வாங்கலாம்.

விவசாயப் பிரிவு
**சிங்கர்**
மாசற்ற மேன்மை

விலை: ரூ. 11,215/-

Minds/SA/5

**சிங்கரின் பராமரிப்புச் சேவை உன்னதமானது. நம்பகமானது. தீவடங்கலானது.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மழையை நம்பி நெல்லை விதைத்தனர்!

# முல்லைத்தீவில் விவசாயிகள் பெரும் அவதி

புதுக்குடியிருப்பு நவ. 1

முல்லைத்தீவு விவசாயிகள் மழையை நம்பி வயலை உழுது நெல் விதைத்துள்ளனர். ஆனால்வானம்பொய்த்து விட்டதால் அவர்கள் விதைத்த நெல் வெயில் காய்ந்து கொண்டிருக்கின்றது.

"மிகுந்த சிரமத்துக்கு மத்தியில்அமைதிப் படையினரிடம் அனுமதி பெற்று நெல்லை விதைத்தோம். இப்போதுவானம் பொய்த்து விட்டது இருந்த முதலும் போய், நெல்லும் போய் விட்டது. அனுமதி கிடைத்திருக்காவிட்டால் விதை நெல்லாவது மிஞ்சியிருக்கும்" என்று மனம்வேதனைப் படுகின்றனர். விவசாயிகள். (இ-126)

## பாம்புதீண்டி மரணம்

கோப்பாய், நவ 1

கோப்பாய் வடக்கைச் சேர்ந்த க. விநாயகமூர்த்தி (வயது 47) என்பவர் பாம்பு தீண்டி மரணமானார்.

## யாழ்ப்பாணக் கல்லூரி மாணவன் சாதனை

யாழ்ப்பாணம் நவ. 1

வட்டுக்கோட்டை. யாழ்ப்பாணக் கல்லூரியைச் சேர்ந்த செல்வன் சோதிலிங்கம், சிங்கப்பூரில் நடைபெற்ற 2 ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டியில், இலங்கைத் தேசிய அணியின் சார்பில் கலந்து கொண்டார்.

யாழ்ப்பாணக் கல்லூரி ஜி. சி. ஈ உயர்தர வணிகப் பிரிவில் கல்விகற்கும் இவர், கடந்த ஆண்டுகளில் கல்லூரி மெய்வல்லுனருக்கான சாம்பியன் பட்டங்களைப் பெற்றதோடு கல்லூரியின் மெய்வல்லுனருக்கான பல பழைய சாதனைப் பதிவுகளை முறியடித்து புதிய சாதனைகளையும் நிலை நாட்டி இருந்தார்.

கொழும்பு சுகதாச உள்ளரங்கில் நடைபெற்ற தேசிய அளவிலான போட்டிகளில் பங்கு பற்றி 100 மீற்றர் 200 மீற்றர் ஓட்டப் போட்டிகளில் பதக்கங்களைப் பெற்றார்.

சிங்கப்பூரில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டியில், இலங்கையைச் சேர்ந்த ஒரே தமிழ் உறுப்பினரான செல்வன் சோதிலிங்கம், ஜப்பான், சீன, கொரியா முதலிய நாடுகள் உட்பட 24 நாடுகள் பங்கு பற்றிய 100 மீற்றர் ஓட்டப்போட்டியில் நான்காவது இடத்தைப் பெற்று ஆசிய தகைமைச் சான்றிதம் பெற்றுக் கொண்டார்.

இவர் அராலியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். (ச)

## அதிபர் பதவி பரீட்சை 12, 13ல்

கொழும்பு நவ. 1

முதலாம், இரண்டாம், மூன்றாம்தர அதிபர்பதவிக்கான பரீட்சைகள் இம் மாதம் 12, 13 ஆம் திகதிகளில் நடைபெறும் என்று அறிவிக்கப்படுகிறது.

சுமார் 11 ஆயிரம் பேர் இப் பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ளனர். (ஒ-எ)


## பிரயாண ஒழுங்குகள்

### Saudi Arabia

சவூதி அரேபியாவில் மிகவும் பிரபல்யமான மீன் பிடிக்கும் கம்பனிக்கு Fishing Roller இல் மீன்பிடிப்பதற்கு 8 வெற்றிடங்கள் மட்டும் உண்டு

- உடன் பிரயாணம்
- வயது 25க்கு மேல்
- சம்பளம் 600 SR

வீட்டு சாரதி
600 + உணவு, இருப்பிட வசதி

டீசல் மெக்கானிக்
ரிங்கர்
தொழிலாளி } பாரேயின்

கிளீனேர்ஸ் 350 + 100

### குவைத்

கிளீனேர்ஸ் 33 KD

- பாஸ்போட் இல்லாதவர்க்கு உடன் பாஸ்போட் செய்து பிரயாணஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

**V. N. சிவஞானம்**
A 449, இராமலிங்கம் றேட்,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(7677)


## அரசாங்க அதிபரும் மற்றும் அதிகாரிகளும் புதுக்குடியிருப்பு விஜயம்

புதுக்குடியிருப்பு நவ 1

முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு க. பொன்னம்பலமும் ஏனைய அதிகாரிகளும் புதுக்குடியிருப்புப் பிரதேசத்துக்கு விஜயம்செய்து மக்களின் குறைகளை நேரடியாகக் கேட்டறிந்தனர்.

உதவி அரசாங்க அதிபர்கள், காணி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் அரசாங்க அதிபருடன்கூடச் சென்றனர்.

இவர்களது விஜயத்தின் போது மக்கள் பிரதிநிதிகள் நமது பிரதேசக் குறைபாடுகளை தெளிவாக எடுத்துரைத்தனர்.

1 வருடத்துக்கு மேலாக திறக்கப்படாமல் உள்ள மகாவித்தியாலயம்

பரந்தன் முல்லைத்தீவு வீதியின் சீர்கேடு.

விவசாயம் செய்வதில் உள்ள இடர்ப்பாடுகள்.

பொதுச் சந்தையின் புனரமைப்பின் முக்கியத்துவம்

பொதுநூலகம் இயங்க முடியாமல் உள்ளதால் மாணவர்கள் படும் கஷ்டம்

வைத்திய சாலையில் மருந்து வகைகள் இல்லாததால் நோயாளர் படும் அவதி.

முல்லைத்தீவு—மாத்தளன் பஸ்சேவை இல்லாததால் பின்தங்கிய அப்பிரதேசத்தில் உள்ள மக்கள் எதிர்நோக்கும் துன்பங்கள்.

500 மீற்றர் பாதுகாப்பு வலய நடைமுறையினால் அப்பிரதேசத்தில் உள்ள மக்கள் மீளக்குடியிருக்க முடியாமல் படும் அவதி.

இதைப் போன்ற பல்வேறு பிரச்சினைகளை நேரடியாக மக்கள் பிரதிநிதிகள் எடுத்துரைத்தனர்

இதனை அடுத்து முல்லைத்தீவு — மாத்தளன் பஸ்சேவையை ஆரம்பிப்பதற்காக வைத்தியசாலை வீதியை உடனடியாகத் திருத்தி அமைப்பதற்கு புதுக்குடியிருப்பு மேற்கு கிராமோதய சபைக்கு அனுமதி வழங்கப்பட்டது.

ஏனைய குறைபாடுகளையும் நிவர்த்தி செய்ய நடவடிக்கைமேற்கொள்வதாக உறுதி அளிக்கப்பட்டது (இ 126)

## மனனம் செய்யும் பழக்கம் சிறுவர் மத்தியில வேண்டும்

இளம் சமுதாயத்தை நல்வழிப்படுத்தும் காரியங்களை நாம் ஆரம்பத்திலேயேசெய்ய வேண்டும்.

மனனம் செய்யும் பழக்கத்தை சிறுவர் மத்தியில் பரவச் செய்ய வேண்டும்

நூற்றுக்கணக்கான பிள்ளைகளை மனனம் செய்ய வைத்து பரிசுகள் வழங்கும் பணி வருடந்தோறும் நடைபெற வேண்டும்.

பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி அதிபர் திரு வே. நாகராசா சம்பளை அப்பாள் பஜனைச் சபையினர் நடத்திய மனனப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கி உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார்

சம்பளை அம்பாள் ஆலய பரிபாலன சபைத் தலைவர் திரு சி அப்புத்துரை தலைமையில் பரிசளிப்பு விழா நடைபெற்றது.

புலவர் சு. சுந்தரம்பிள்ளை வரவேற்புரை நிகழ்த்தினார்.

திரு. கெ. நடராசா, க. வாமதேவன் ஆகியோரும் உரையாற்றினார்.

மனனப் போட்டியில் பரிசு பெற்றோர் பின் வருமாறு:

ஆரம்பப்பிரிவு: சகலகலாவல்லிமாலை மனனம் செய்தல்: 1. பிரதீபன் 2 நா: மஞ்சுளா 3 சி: சிவசுகி

கீழ்ப்பிரிவு: சகலகலாவல்லிமாலை மனனம் 1 சி. உமாராணி, 2 ந. பவானி, சி. காஞ்சனா, 3 நா. கவிதா

மத்தியபிரிவு; பஞ்சபுராணம் மனனம்: 1 இ வாலாம்பிகை: க. ஞானேஸ்வரி, 2. ஜெ. மதுமதி, 3 சி சிவசுதன.

மேற்பிரிவு அபிராமி அந்தாதி. நமச்சிவாயப் பதிகம் மனனம்: 1 அனுசியா, ச. சிவசங்கரி, 2 நா. கௌரி, பொ ஜெயரஞ்சனி இ. ஜெயராணி, அ. முகுந்தன, 3 ஆ. தயாளினி, கு. கலாநிதி. (ச—ரி)

## ஹோமியோபதி வைத்திய முறை அபிவிருத்தி செய்யப்படும்

கொழும்பு, நவ 1

ஹோமியோபதி வைத்திய முறையை அபிவிருத்தி செய்ய சுதேச வைத்திய சேவைகள் அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகிறது.

ஆங்கிலத்தில் உள்ள ஹோமியோபதி வைத்திய நூல்கள் சிங்களத்தில மொழிபெயர்க்கப் படவுள்ளன.


ஹோமியோபதி வைத்திய சிகிச்சையை பத்து ஆண்டுகளுக்கு மேலாக மேற்கொண்டு வந்த வைத்தியர்களை பதிவு செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இதற்கான விசேட பரீட்சை ஒன்று நடத்தப்படும். இதற்காக இந்திய ஹோமியோபதி வைத்திய நிபுணர் ஒருவர் அடுத்த மாதம் வர இருக்கிறார்.

ஹோமியோபதி வைத்தியக் கல்லூரி ஒன்றும் நிறுவப்படும்,

சுதேச வைத்திய சேவைகள் அமைச்சுச் செயலாளர் திரு. ரி. பி. வேரகொட இத்தகவல்களை கொழும்பில செய்தியாளர் மாநாட்டில தெரிவித்தார். (இ-எ)


### ஓராண்டு நினைவஞ்சலி



அமரர் வன்னித்தம்பி - ஐயாத்துரை
(வர்த்தகர்- காங்கேசன் துறை)

தோற்றம்:- 22-4-1924 மறைவு:- 13-11-1987

திதி:- 01-11-1988

அன்புத் தெய்வமே! இம் மண்ணை விட்டு மின்னலென மறைந்து ஓராண்டாகி விட்டாலும் எங்கள் உள்ளங்களின் அணையாத தீபமாய் என்றென்றும் ஒளிவீசும் குலதெய்வமே! உங்களின் முதலாண்டு திதி நடைபெறும் இந் நாளில் உங்களின் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டி நிற்கும்,

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமகன், பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள்

சாந்தா வீதி,
தையிட்டி,
காங்கேசன்துறை (7592)

### 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



வல்லி நடராசாலிங்கம் (நடராசா)
(கட்டட ஒப்பந்தக்காரர்)

அன்னையின் மடியில், 26. 06. 1952 அழிப்பு: 13. 11. 1987

திதி: 01-11-1988

ஈழமண்ணில் இணுவில் பஞ்சத்தடியில் உதித்த நடராசாவே! ஆண்டுதான ஒன்று மறைந்திடினும் அகிலமேதான் அழிந்திடினும் மாறாது உன் நினைவு என்றும் எம் மனதை விட்டு. எத்தனையோ இடர்கள் மத்தியிலும் உன் உயிரைப் பொருட்படுத்தாமல் உழைத்தாயே நடராசா கலைத்துறையில் நீ ஆற்றிய பங்கை என்றும் எம் மக்கள் மறந்திட மாட்டார்கள். இறக்கும் நாளில் கூட மக்களோடு மக்களாய் சென்றாயேடா! உன்னுடன் சென்றோர் வந்தனர் ஆனால் நீ வரவில்லை. உன் உயிர்தான் போய்விட்டது என்றால் உன் உடம்பும் எமக்குக் கிடைக்கவில்லையேடா. என்றும் உன் நினைவு எங்கள் மனதில் நீங்காது நிலைத்திருக்கும்!

உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி. பிள்ளைகள், அம்மா,
அப்பா, அண்ணன், அக்காமார்,
தம்பிமார், தங்கை, மருமக்கள்.
பெருமக்கள்.

(7586)

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
சோமசுந்தரம் இராசம்மா
[கந்தரோடை]

மலர்வு: 07 - 08 - 1898 உதிர்வு: 14 - 11 - 1987

ஆண்டுத் திவசத் திதி 01 - 11 - 1988

ஆயிரம் பிறைகள் கண்ட அன்னையே!
ஆசையுடன் அழைக்க இன்றில்லையே!
பாசமுடன் எமை வளர்த்தெடுத்தீரே!
நேசமுடன் இன்று யாம் நினைவில்
நிறுத்துகின்றோம்!

அம்மம்மா! அப்பாச்சி! என்றழைக்க அன்பான பேரர்களும், அயலாரும் இங்கிருக்க ஏங்கித் தவிக்கவிட்டுச் சென்றுவிட்டீர், எங்குற்றீர்.

உங்கள் பிரிவால் துயருறும்
மக்கள், மருமக்கள் பேரப்பிள்ளைகள்
பீட்டப்பிள்ளைகள்.

"லிங்கவாசா"
கந்தரோடை,
சுன்னாகம். (7585)

### இரண்டாம் ஆண்டு நினைவுதினம்



நவரட்ணம் ஜெயபாலன்

மலர்வு: 23 - 02 - 1952 உதிர்வு: 09 - 11 - 1986

திதி. 01 - 11 - 1988 (செவ்வாய்)

ஆண்டு இரண்டு முடிந்ததைய்யா
உன் அன்பு முகமும் செயலும் எங்கள்
மனதில் நீங்காமல் நிற்குதைய்யா
நீ வாழும் வயதினிலே எங்களின்
அன்பையும் மறந்து காலனுடன்
சென்று விட்டாய. என்றும் உன்னை
நினைந்து கண்ணீர் விடும்

தாய், தந்தை, மனைவி, மகன் இரண்டும்,
சகோதரர், சகோதரிகள், மைத்துனர்,
மைத்துனிமார், உறவினர்கள்.

[illegible]
காங்கேசன் துறை. (7676)

### ஓராண்டு நினைவஞ்சலி



பொன்னம்பலம் பொன்னுத்துரை

தோற்றம்.- 12- 3- 1926 மறைவு:- 14- 11- 1987

திதி:-1- 11- 1988

அன்பின் பிறப்பிடமாய். பாசத்தின் உறைவிடமாய், பண்பின் சிகரமாய் எங்கள் குடும்ப ஒளி விளக்காய் வழி நடத்தி எம்மை மீளாத்துயரில் ஆழ்த்திய அன்புத்தெய்வமே! ஓராண்டு பூர்த்தியாகிய இன்று உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, மக்கள், மருமக்கள்

இருபாலை றோட்
கோண்டாவில் (7591)

### ஓராண்டு நினைவஞ்சலி



சோமசுந்தரம் இளங்கோ
(பிறேமன்)
[சாவகச்சேரி இந்துக்கல்லூரி மாணவன்]

மண்ணில்: 1973- 02- 11 விண்ணில: 1987- 10- 20

திதி: 1988- 11- 01

இளம் பரிதி போல் வளர்ந்து
இனிய தமிழ் பகை போக்க
களங்கண்ட வீரனையுனைக்
காலன்தான் கவர்ந்தானோ?
ஓராயிரமாண்டு ஓடி மறைந்தாலும்
ஒன்றுமட்டும் உண்மை உன் நினைவு
மாறாது
பேராயிரம் பெற்றுச் சிவனடியில் நீவாழ
சிந்தை உருகி நாம்
அஞ்சலிக்கின்றோமே!

பெற்றோர்,
உடன்பிறப்புக்கள்

சங்கத்தானை,
சாவகச்சேரி (7584)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**
கேடினும் உண்டோர் உறுதி கிளைஞரை
நீட்டி அளப்பதோர் கோல்.

**பொருள்:**
கேடு வந்தபோதும் ஒருவகை நன்மை உண்டு; அக்கேடு ஒருவனுடைய நண்பரின் இயல்புகளை நீட்டி அளந்து பார்ப்பதொரு கோலாகும்.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல: 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24805, 22073
01- 1 1988 த. பெ இல 23


## சாதனையும் நிகரும்

கிழக்கு இலங்கையில் உள்ள சிங்களக் கிராமங்களைப் பாதுகாக்க இரண்டு விசேட இராணுவப் பிரிவுகளை ஆரம்பிக்க அரசு ஒழுங்குகள் செய்து வருவதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன.

இந்தச் செய்தியைப் படித்ததும் எந்தத் தமிழனும் ஆழ்ந்து யோசிக்கவே செய்வான். இந்தப் புதிய ஏற்பாட்டின் உள்நோக்கம் எதுவாக இருக்கும் என்றும் அவன் ஐயப்படுவான்.

இந்த நாட்டிலே இராணுவப் பாதுகாப்பு என்றாலும் சரி வேறு எந்த வகைப் பாதுகாப்பானாலும் சரி, சிங்கள மக்களுக்கே சர்வ சொந்தம். அவர்களுக்கே சட்டரீதியாக வழங்கப்படுகிறது.

கடந்த ஐந்து ஆண்டு காலத்திற்கு மேற்பட்ட சம்பவங்களையும், அரசியல் ஓட்டத்தையும் கூர்ந்து கவனித்தால், அரச படைகள் தமிழர்களுக்குப் பாதுகாப்பாக இருந்ததில்லை என்பது நன்கு புரியும்.

அதற்கு நேர்மாறாகத் தமிழர்களின் எதிரிகளாக தமிழர்களை அடக்கி ஒடுக்கப் பாவிக்கப்படும் ஏவலாளிகளாக, கூலிப்படைகளாகவே அவை இயங்கி வந்தன.

அதன் காரணமாக, இலங்கை முப்படைகள் பற்றும் பொலிசார் சிங்கள மக்களின் ஏக பாதுகாவலர்களாக இருந்தார்கள்; இருக்கிறார்கள் என்பதை எவரும் மறுத்துரைக்க முடியாது.

ஆனால் தமிழர்களோ, அதே இலங்கைப் படைகளின் இன்னல்களில் இருந்து தங்களைப் பாதுகாக்க முடியாமல் தவித்தார்கள்.

நிலைமை அப்படி இருக்கும்போது சிங்களக் கிராமங்களுக்கு — தமிழ்ப் பிரதேசங்களின் — அவற்றின் எல்லைப்பகுதிகளில் — உள்ள சிங்களக் கிராமங்களுக்கு விசேட படைப் பாதுகாப்பு வழங்கப்போவதாகக் கூறுவதன் அர்த்தம் என்ன?

இதற்கு முன்னர், கிழக்கில் உள்ள சிங்கள மக்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதற்காக என்று ஊர்காவல்படை என்றும் அதிரடிப் படை என்றும் ஆயுதப்பிரிவுகள் ஸ்தாபிக்கப்பட்டன.

அவை சிங்கள மக்களுக்குப் பாதுகாப்பு வழங்கினவா அல்லது தமிழ் மக்களை அழித்தனவா என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம்.

தமிழ்ப் பிரதேசங்களை அண்டிய சிங்களக் கிராமங்களில் சில சந்தர்ப்பங்களில் வன்செயல்கள் காரணமாக சிங்களக் கிராமவாசிகள் கொலை செய்யப்படுகிறார்கள் என்பது உண்மைதான். அந்தச் சாவுகள் தடுக்கப்படவேண்டும் என்பதை எவரும் மறுப்பதற்கில்லை.

ஆனால் அதற்கென்றே விசேடமாக ஆட்களைத் திரட்டி, புதிதாக இரண்டு பிரிவுகளை (பட்டாலியன்களை) உருவாக்குவது என்பது விஷமத்தனமானது; இனப்பகையை மேலும் மூட்டும் விதத்தில தமிழர்களை இன்னற்படுத்துவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கை அன்றி வேறல்ல.

இப்போதைய நிலையை எடுத்துப் பார்த்தால், தெற்கிலும் சிங்களக் கிராமவாசிகள் தினம் தினம் கொல்லப்படுகிறார்கள். அப்படியானால் அங்கும் விசேட படைகளை அரசு நிறுவுமா?

சிங்களவருக்கு ஒரு நீதி, தமிழர்களுக்கு வேறு நீதி என்ற இலங்கை அரசின் அதாமப போக்கு ஒருபோதும் மாறப்போவதில்லை என்பதற்கு இந்தப் புதிய முயற்சி மற்றொரு எடுத்துக்காட்டு. இனப்படுகொலைகளை தடுப்பதற்குப் பதில் தூண்டிவிடவே அது விரும்புகிறது என்றும் சொல்லலாம்.

குண்டர்களைத் தொண்டர் படையாக்கி, அந்தத் தொண்டர்களை இராணுவச் சட்டைக்குள் "புகுத்தி" தமிழ்ப் பிரதேசங்களில் வாழும் எல்லைப்புறங்களில் வாழும் சிங்கள மக்களுக்குப் "பாதுகாப்பு" வழங்கும் இப் பாதுகாப்பு முறையை அறிமுகப்படுத்துவதிலும், நடைமுறைப்படுத்துவதிலும் இலங்கை அரசுக்கு நிகர் இலங்கை அரசுதான்.

பாதுகாப்பு வழங்குதல் என்ற போர்வையில் தமிழ்ப் பிரதேசத்தின் பரப்பளவைச் சூறையாடுவதிலும் அதற்கு நிகர் அதுவேதான்! இவ்வாறு, வேறு எந்த நாட்டையும் விடச் சாதனை புரிவதும் அதுவேதான்.

# இஸ்ரவேலிய பயணிகள் பஸ் மீது பெட்ரோல் குண்டு வீச்சு; 3பேர் பலி

டெல் அவிவ், அக். 31
கைப்பற்றப்பட்ட அரபுப் பிரதேசமான மேற்குக் கரைப் பகுதியில் இஸ்ரவேலிய பயணிகள் பஸ் ஒன்று இனந்தெரியாத நபர்களினால் பெட்ரோல் குண்டுகளினால் தாக்கப்பட்டது.

இதில் இஸ்ரவேலியப் பெண் ஒருவரும் அவரின் 3 குழந்தைகளும் எரியுண்டு இறந்தனர்.

இனந்தெரியாதவர்களால் வீதிக்குக் குறுக்கே தடை போட்டு பஸ் மறிக்கப்பட்டதாகவும் — பின்னர் பெட்ரோல் குண்டுகள் பஸ் மீது வீசப்பட்டது எனவும் நேரில் சம்பவத்தைக் கண்டவர்கள் தெரிவித்தனர்.

ஏனைய பயணிகள் பஸ்ஸின் யன்னல் ஊடாக பாய்ந்து தப்பினர்.

பஸ் வெடித்துச் சிதறியது. இதைத் தொடர்ந்து மேற்குக் கரைப் பகுதி முழுவதும் ஊரடங்குச் சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது.

இத்தாக்குதலை நடத்தியவர்கள் தண்டிக்கப்படுவர் என்று இஸ்ரவேலிய அரசு அறிவித்தது.

கைப்பற்றப்பட்ட அரபுப் பிரதேசங்களை மீட்கும் கிளர்ச்சியை பலஸ்தீனியர்கள் ஆரம்பித்து ஒரு வருடமாகிறது.

இக்காலத்தில் இடம்பெற்ற தாக்குதல்களில் இது மோசமானதென்று வருணிக்கப்படுகிறது. (எ)

### ஹெலிக் கொப்டர் விபத்து: 8 பேர் பலி

கலிபோர்னியா, அக் 31
போதைவஸ்து கடத்தலில் ஈடுபடுவோரைக் கண்டுபிடிப்பதில் ஈடுபட்டிருந்த ஹெலிகொப்டர் ஒன்று மற்றும் மெக்ஸிக்கோ எல்லையில் விபத்துக்குள்ளானது.

ஹெலிகொப்டரில் பயணம் செய்த எட்டுப் பாதுகாப்பு அதிகாரிகளும் உயிரிழந்தனர்.

# ஐ. நா. சபையில் இருந்து இஸ்ரவேலை விலக்கும் முயற்சி ஏழாவது முறையும் தோல்வி

ஐக்கியநாடுகள் சபையில் இருந்து இஸ்ரவேலை வெளியேற்றும் பிரேரணை நிராகரிக்கப்பட்டது.

அரபு நாடுகள் கூட்டாக இப் பிரேரணையை ஐ நா பொதுச் சபைக் கூட்டத்தில் கடந்த வாரம் கொண்டுவந்தன.

பிரேரணையை எதிர்த்து 95 நாடுகள் வாக்களித்தன.

கடந்த ஆண்டிலும் பார்க்க 15 நாடுகள் புதிதாக இஸ்ரவேலுக்கு ஆதரவாக வாக்களித்தன.

கம்யூனிஸ்ட் நாடான ஹங்கேரி முதன் முறையாக இஸ்ரவேலுக்கு ஆதரவாக வாக்களித்தது.

டொமினிக்கா, டொமினிக்கன் குடியரசு, கினிபிசா, மொரிஷியஸ், பப்புவா நியூகினி, செண்கிட்ஸ் - நெவிஸ், சஓ டோமி செயறாலியோனா, செவ்வன் தீவுகள் சுரினாம் ஸாம்பியா ஆகிய நாடுகள் புதிதாக இம்முறை இஸ்ரவேலை ஆதரித்தன.

41 நாடுகள் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தன. கடந்த ஆண்டில் வாக்களித்த நாடுகள் 39.

ஆப்கனிஸ்தான், கொங்கோ, ஜோர்தான், நைகர், செனகல், ஸிம்பாப்வே ஆகியன நடுநிலையில் இருந்து விலகி இஸ்ரவேலுக்கு எதிராக முதல் தடவை வாக்களித்தன. [எ]

வெளி உலகில்

## வெட்டுக்கிளித் தொல்லையால் ஒரு கோடி ஹெக்டேர் பாதிப்பு

லண்டன் அக் 31
ஆபிரிக்கக் கண்டத்தில் வெட்டுக்கிளிகள் தொல்லை மோசமாகப் பரவியிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இந்த நூற்றாண்டிலேயே வெட்டுக்கிளிகள் இது போன்று பயிர்களை அழிக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

மொரோக்கோத் தலைநகரில் நடந்த சர்வதேச மாநாடு ஒன்றில் இத்தகவல் வெளியிடப்பட்டது.

நைல் நதிக்கரையில் இருந்து அத்லாண்டிக் வரையில் சுமார் 2 கோடி 30 லட்சம் ஹெக்டேர் நிலத்தில் மேற்கொள்ளப்பட்ட பயிர்ச்செய்கை வெட்டுக்கிளிகளினால் பாதிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இந்த தொகையில் அரைப்பங்குக்கே கிருமிநாசினி தெளிக்கப்பட்டது.

வெட்டுக்கிளித் தொல்லையை நீக்க என்ன வழிகளை எடுப்பது என்பது பற்றி ஆராயவே இச் சர்வதேச மாநாடு நடத்தப்பட்டது. 35 நாடுகள் இதில் கலந்து கொண்டன. (எ)

## அல்ஜீரியாவில் 1ஆவது சர்வஜன வாக்கெடுப்பு!

அல்ஜியர்ஸ், நவ 1
அரசியல் சீர்திருத்தத்தை மேற்கொள்வது பற்றி மக்களின் கருத்துக்களை அறிந்து கொள்ளும் முதலாவது சர்வசன வாக்கெடுப்பு எதிர்வரும் வியாழன் அல்ஜீரியாவில் நடைபெறவுள்ளது.

அல்ஜீரிய ஜனாதிபதி அண்மையில் இதனை அறிவித்தார்

புதிய சீர்திருத்தத்தின்படி ஒரு கட்சி ஆட்சி அரசியல் முறை தொடர்ந்து கடைப்பிடிக்கப்படும் ஆனால் தேர்தல்களில் அக் கட்சி வேட்பாளருக்கு எதிராகப் பிரசாரம் செய்ய மக்கள் அனுமதிக்கப்படுவர்.

சர்வசன வாக்கெடுப்பைப் பகிஷ்கரிக்கும்படி எதிர்க்கட்சிகள் மக்களைக் கேட்டுள்ளன.

இதனிடையில்—

இரண்டாவது சர்வசன வாக்கெடுப்பு ஒன்று அடுத்த ஆண்டு நடத்தப்படும் எனவும் அதன் பின்னரே அரசியல் சீர்திருத்தம் அமுலுக்கு வரும் என்றும் ஜனாதிபதி அறிவித்து இருக்கிறார். (எ)

இந்திராகாந்தி கொலை வழக்கு

## இரண்டாவது எதிரி கேஹர் சிங்கின் கருணை மனுவுக்கு எதிராக சிபார்சு!

புதுடில்லி அக் 31
இந்திராகாந்தி கொலை வழக்கில் தூக்கு மேடையை எதிர்நோக்கி இருக்கும் இரண்டு எதிரிகளில் ஒருவரான கேஹர் சிங்குக்கு கருணை காட்டுவதற்கு எதிராக மத்திய அரசு சிபார்சு செய்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

கருணை மனு ஒன்றை கேஹர் சிங் சார்பாக அவரின் மகன் ஜனாதிபதிக்கு அனுப்பியிருக்கிறார்.

அந்த மனு தற்சமயம் ஜனாதிபதியின் பரிசீலனையில் இருக்கிறது.

மனு பற்றிய மத்திய அரசின் சிபார்சை ஜனாதிபதி கேட்டிருந்தார்.

மரணதண்டனை விதிக்கப்பட்ட முதலாவது எதிரியான சத்வன்சிங், ஜனாதிபதிக்கு கருணை மனு சமர்ப்பிக்கவில்லை.

"கருணை மனு சமர்ப்பிக்கப்போவது இல்லை நடப்பது நடக்கட்டும்" என்று சத்வன்சிங் தெரிவித்து இருக்கிறார்.

இருவருக்கும் விதிக்கப்பட்ட மரண தண்டனையை நிறைவேற்றும் உத்தரவில் நீதிபதி கைச்சாத்திட்டது தெரிந்ததே. (எ)

கடைசி நிமிடத்தில் ரத்தான

## சோவியத் விண்கலம் 'புரான்' பயணம் வருகிற 7ஆம் திகதி இடம்பெறும்

மாஸ்கோ அச் 31
சோவியத் யூனியனின் 'புரான்' (Buran) விண்வெளிக்கப்பல் மீண்டும் வானவெளிக்கு வருகிற ஏழாம் திகதி அனுப்பப்படும்

இப்படி டாஸ் செய்தி ஸ்தாபனம் நேற்று அறிவித்தது

இவ் விண்வெளிக் கப்பல் நேற்று முன்தினம் அனுப்பப்படவிருந்தது ஆனால் கடைசி நிமிடத்தில் கப்பலை எடுத்துச் செல்ல இருந்த 2 ஆயிரம் தொன் எடை கொண்ட 'எனர்ஜியா' ரொக்கட்டின் உந்துசக்தியில் ஏற்பட்ட கோளாறு காரணமாக 'புரான்' வானவெளிக்கு அனுப்பப்படுவது நிறுத்தப்பட்டது.

கோளாறுக்குக் காரணம் என்ன என்பது பற்றி விசாரிக்கப்பட்டு வருகிறது. (எ)

# 1982 சர்வஜன வாக்கெடுப்பு செல்லுபடியாகாது என்று கோரும் மனு

### உயர் நீதிமன்றத்தில் விசாரணை

கொழும்பு, நவ 01
1982 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட சர்வசன வாக்கெடுப்பை செல்லுபடியாகாது என்று கோரும் மனு ஒன்று அடிப்படை உரிமைச் சட்டத்தின் கீழ் உயர் நீதிமன்றத்தின் முன் கடந்த வாரம் விசாரணைக்கு வந்தது.

பொடிபுத்தா என்று அழைக்கப்படும் முனைனுள்ளம் பி முதியான்ஸே தென்னக்கூன் விண்ணப்பத்துக்கு ஆதரவாக வாதாடினார்.

அவர் அச்சமயம் சொன்னதாவது;

சர்வசன வாக்கெடுப்புப்பற்றி தேர்தல் ஆணையாளரின் அறிக்கையை நான் சமர்ப்பிக்கிறேன்.

சர்வசன வாக்கெடுப்பின்போது புள்ளடியிடப்பட்ட வாக்குச் சீட்டுகளை வாக்காளர்கள் வெளியில் கொண்டு வந்து காட்டியிருக்கின்றனர்.

பாதுகாப்பின்மை காரணமாக தேர்தல் அவதானிகள் வாக்களிப்பு முடிவதற்கு முன்னரே வெளியேறி விட்டனர்.

வெளிச்சக்திகள் வாக்களிப்பு நிலையங்களுக்குள் புகுந்து குழப்பம் நடத்தினர்.

இவ்வாறான புகார்கள் வந்ததாக தேர்தல் ஆணையாளர் தனது அறிக்கையில் கூறியிருக்கிறார்.

ஆகவே 1982 சர்வசன வாக்கெடுப்பின் முடிவு செல்லுபடியாகாதுஎன்று அறிவிக்கும்படி தேர்தல் ஆணையாளருக்கு நீதிமன்றம் உத்தரவிட வேண்டும்.

அரசமைப்புச் சட்டத்தின் 104 ஆவது ஷரத்தின்படி தனது கடமைகளைச் செய்யும்படி தேர்தல் ஆணையாளருக்கு நீதிமன்றம் உத்தரவிட வேண்டும்.

இப்படி திரு. தென்னக்கூன் வாதாடினார்.

இக்கட்டத்தில இவ் விண்ணப்பத்தை விசாரிக்க தான் விரும்பவில்லை என்று நீதியரசர் ஜி பி எஸ். டி சில்வா தெரிவித்தார்.

இன்னொரு நீதியரசர் குழு முன்னால் விசாரணைக்கு இந்த விண்ணப்பத்தை அனுப்பும்படி நீதிமன்றப் பதிவாளருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது

கடந்த புதன் இவ் விண்ணப்பம் நீதியரசர்கள் ஜி பி. எஸ், டி. சில்வா, ஓ எஸ். எம். செனவிரத்ன திஸ்ஸ பண்டாரநாயக்கா ஆகியவர்கள் முன் விசாரணைக்கு வந்தது.

மீண்டும் இவ்விண்ணப்பம் இன்று முதலாம் திகதி புதிய உயர் நீதிமன்ற நீதியரசர் குழு முன் விசாரணைக்கு வரும், (இ-எ)

### மேலதிக பஸ் சேவை நிறுத்தம்

யாழ்ப்பாணம் நவ 1
கொழும்பிற்கு வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் கோண்டாவில் சாலை தற்காலிகமாக நடத்தி வந்த மேலதிக பஸ் சேவை இடைநிறுத்தப் பட்டுள்ளது

வவுனியா - கொழும்பு ரயில் சேவை இடைநிறுத்தப்பட்டதை அடுத்தே இந்த மேலதிக பஸ் சேவை ஆரம்பிக்கப் பட்டிருந்தது. (இ-எ)

### மோட்டார் வந்தும் மின்சார இணைப்பு இல்லை

மருதங்கேணி: பளை வைத்தியசாலையில் போதிய தண்ணீர் வசதி இன்றி நோயாளிகள் அல்லற்படுகின்றனர்.

தண்ணீர் இறைக்கும் இயந்திரம் இரண்டு மாத காலத்துக்கு முன்னர் வழங்கப்பட்ட போதிலும் அதற்கு இன்னமும் மின்இணைப்பு வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (இ- 72)

ஜனாதிபதி-7கட்சிகள் சந்திப்பு

## திட்டவட்டமான முடிவில்லை

கொழும்பு நவ 1
ஜனாதிபதியுடன் ஏழு எதிர்க்கட்சிகள் நடத்திய மூன்றாவது சந்திப்பு, எதுவித திட்டவட்டமான முடிவுக்கும் வராமல் முடிந்துவிட்டது.

தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செயலாளரும் கூட்டணிப் பேச்சாளருமான திரு குமார் பொன்னம்பலம் இதனைத் தெரிவித்தார்.

எதுவித நிச்சயமுமின்றி நாடாளுமன்றத்தைக் கலைக்க ஜனாதிபதி ஜெயவர்த்தன முன்வர வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் கூட்டணி வற்புறுத்துவதாகத் தெரிகிறது

இதனிடையில் ஜனாதிபதி பதவியில் இருந்து திரு ஜெயவர்த்தன முதலில் விலகவேண்டும் என்று ஜே வி பி வற்புறுத்துவதாகத் தெரிகிறது. (இ-எ)

# கால்நடை இழந்தோருக்கு நிவாரணம் வழங்க கோரிக்கை

கடந்த வருடம் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் காரணமாக கால்நடைகளை இழந்தவர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும்.

சுன்னாகம் கால்நடை வளர்ப்போர் சங்கம் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளது.

இக்கிளையின் நிர்வாக சபைக் கூட்டம் அண்மையில் தலைவர் திரு. பா. சுதர்சன் தலைமையில் நடைபெற்றபோது இது தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டது.

இத்தீர்மானத்தைப் புனர்வாழ்வு அமைச்சர், கால்நடை உற்பத்தசுகாதார அணிப்பாளர், கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் ஆகியோருக்கு அனுப்பி வைப்பது என்று முடிவெடுக்கப் பட்டது.

இத் தீர்மானம்பற்றிக் குறிப்பிடுகையில் திரு. பா. சுதர்சன் கூறியதாவது

கடந்த வருடம் நடைபெற்ற அசம்பாவிதங்கள் காரணமாக எமது பகுதியில் மாடுகள், ஆடுகள், கோழிகள் என்பன நூற்றுக்கணக்காக அழிந்துள்ளன.

கால் நடைகளையும் பண்ணைகளையும் நம்பி சீவனம் நடத்திய பல மக்கள் அவற்றை இழந்ததால் எமது வாழ்க்கையை சீரமைத்துக் கொள்ள முடியாமல் உள்ளனர்.

எனவே இவர்களுக்கு நிவாரணம் அல்லது நீண்ட காலக்கடன் அல்லது இறந்த கால்நடைகளுக்குபதிலாகநல்ல இன ஆடு, மாடுகளை கடன் அடிப்படையில் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

-இப்படி அவர்கூறினார்.

இது சம்பந்தமாக சுன்னாகப் பகுதியில்ஏற்பட்ட கால நடை இழப்புகள் பற்றிய தகவல்களை எழுத்து மூலமாக சங்கத்திடம் தந்து உதவுமாறு சுன்னாகப் பகுதி கால நடை வளர்ப்பாளர்களை திரு பா. சுதர்சன் கேட்டுள்ளார்.

### நூல்களை ஒப்படைக்க கோரிக்கை

புதுக்குடியிருப்பு பொது நூலகத்தில் நூல்களை இரவல் பெற்றவர்கள் பலர் அண்மைக் கால நிகழ்வுகளால் அவற்றைத் திருப்பி ஒப்படைக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

அப்படியானவர்களை நவம்பர் 15 ஆம் திகதிக்கு முன் ஒப்படைக்குமாறு புதுக்குடியிருப்பு பிரதேச சபை கோரிக்கை விடுத்துள்ளது. (இ-126)

### யாழ். சுகாதார திணைக்களத்துக்கு கெயர் உதவி

யாழ்- சுகாதாரத் திணைக்களத்துக்கு மருத்துவ உபகரணங்களையும், மருந்து வகைகளையும் "கெயர்" ஸ்தாபனம் அண்மையில் அன்பளிப்பாக வழங்கியது.

கொழும்பில உள்ள கெயர் ஸ்தாபனம் யாழ்ப்பாணத்தில் உள்ள அதன் கிளை ஸ்தாபனம் ஊடாக இவற்றை வழங்கியது.

### சுகாதாரக் கருத்தரங்கு இன்று

யாழ்ப்பாணம், நவ 01
யாழ் பகுதியிலுள்ள பொது ஸ்தாபனங்கள் சுகாதார சேவைகளில் செயல்பாடு கொள்ளவும் ஒத்துழைப்பைப் பெறவும் யாழ் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் என். கனக சபையின் தலைமையில் யாழ் தாதிமார் பயிற்சிக் கல்லூரியில் இன்று காலை 9 00 மணியளவில் மாநாடு ஒன்று நடைபெறும்

பொது நிறுவனங்களின் தலைவர்கள், செயலாளர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகள் இதில் கலந்து கொள்வார்கள்.

இம் மாநாட்டில் தொற்று நோய்த்தடுப்பு நிபுணர் டாக்டர் சா விஜயராசா மாவட்ட தாய் சேய் நலச்சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜி பொன்னம்பலம் ஆகியோரும் உரையாற்றுவார்கள் (ச 18)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org


★ ஜோண்சன்
★ மெரீனு
★ வென்றூட்
வெளியிணை இயந்திரங்களும்
உதிரிப்
பாகங்களும்
நியாயவிலையில்
பெற்றுக்கொள்ள
சேன். அன்ரனீஸ்,
40, கடற்கரை வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

# உதயன்

01 - 11 - 1988 செவ்வாய்க்கிழமை

★ஜோண்சன் ★மெரீனு ★வென்றூட்
வெளியிணை இயந்திரங்கள்
அவற்றிற்கான உதிரிப்பாகங்கள்
வலை, நூல், போயா
போன்ற கடற்றொழில் உபகரணங்கள்
லுமாலா சைக்கிள்
ஆகியவற்றையும் எம்மிடம்
பெற்றுக்கொள்ளலாம்!
சேன். அன்ரனீஸ்
63, யூதாதேயு வீதி,
பாஷையூர், யாழ்ப்பாணம்.

நாளை நமதே

## தர்மயுத்தத்துக்குத் தயாராகுங்கள்!

## அ. தி. மு.க. ஜானகி அம்மாள் அறிக்கை

சென்னை, நவ. 1
"தமிழ்நாடு சட்டசபைத் தேர்தல் ஒரு குருச்சேத்திரப் போர் ஆகும். இதற்கான நாள் விரைவில் குறிக்கப்பட இருக்கிறது. தர்மயுத்தத்தை- நடத்தத் தயாராக இருங்கள்" என்று அ. தி மு. க. தலைவர் ஜானகி அம்மாள் கூறி இருக்கிறார்.

### ஆண்டு விழா

அ. தி. மு. க. வின் 16 ஆவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி ஜானகி அம்மாள் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:

"1972 ஆம் அக்டோபர் மாதம் 17 ஆம் திகதி நம் இதயத்தில் பதிக்கப்பட்ட பொன் நாள், அறிஞர் அண்ணா தந்தை பெரியார் ஆகியோர் காட்டிய பாதையில் நம்மை வழி நடத்தி நம் அரசை நாம் அமைக்க இதய தெய்வம் புரட்சித் தலைவர் நம் கழகத்தை உருவாக்கிய நாள்.

### காலத்தின் கட்டாயம்

அ. தி மு. க. தோன்றியது காலத்தின் கட்டாயம், திராவிட இனத்தின் தேவை. அதுவும் ஒரு அக்டோபர் புரட்சி தான். ஜாதி வேறுபாடு இன்றி சமத்துவ சமுதாயத்தை தமிழ் மண்ணில் அமைக்க அன்று தான் கால்கோள் விழா நடத்தப்பட்டது.

புரட்சித் தலைவரின் பொற்கரங்களால் லட்சிய தீபம் ஏற்றப்பட்டு இன்று 16 ஆண்டுகள் நிறைவடைகிறது. இந்த 16 ஆண்டு பயணத்தில் தடம்பதித்த நம் சாதனைகளை உலகம் உற்று நோக்குகிறது.

### மாணிக்க வரிகள்

தமிழக வரலாற்றில் தங்கபக்கங்களில் மாணிக்க வரிகளால் அவை பொறிக்கப்பட்டுள்ளன. 7 மாதக் குழந்தையாக இருந்தபோதே திண்டுக்கல் இடைத் தேர்தலில் எதிர்த்தவர்களை எல்லாம் புறமுதுகு காட்டி ஓடச் செய்து வெற்றி வாகை சூடி வரலாறு படைத்தது நமது அ. தி. மு. க.

எத்தனை தடைகள், எத்தனை சோதனைகள், எத்தனை வழக்குகள் எத்தனை கொடுமைகள்.

அத்தனையையும் தாண்டி ஆட்சி என்ற வெற்றிக்கனியை அண்ணாவின் இதயக்கனிக்கு அளித்தவர்கள் நீங்கள்.

10 ஆண்டுகாலம் பாரதத்தின் என்றும் எங்கும் இல்லாதவாறு ஒரு கட்சி ஆட்சி பொறுப்பில் இருந்தது என்றால் அது அ. தி. மு. க. தான்.

அந்தத் தலைவர் நமது புரட்சித் தலைவரே. அந்த சரித்திரத்தை படைத்தது உங்கள் உழைக்கும் கரங்களே.

## ஒரே படத்தை 2 இடங்களில் திரையிடுவதற்குத் தடை

### யாழ் மினிசினிமா சங்கம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், நவ 1
யாழ் நகரப் பகுதியில் ஒரே திரைப்படத்தை ஒரே சமயத்தில் இரண்டுக்கு மேற்பட்ட மினி சினிமா தியேட்டர்களில் திரையிடுவது தடை செய்யப்பட்டுள்ளது. இது இன்று முதல் அமுலுக்கு வரும்.

யாழ். மாவட்ட மினி சினிமா சங்கம் வெளியிட்டுள்ள பத்திரிகைக் குறிப்பொன்றில் இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கட்டுப்பாட்டை மீறிச் செயற்படும் மினி சினிமாக்கள் தற்காலிகமாக இடைநிறுத்தப்படும் என்றும்-

இந்தக் கட்டுப்பாட்டை கடைப்பிடிக்க நகரப்பகுதி மினி உரிமையாளர்கள் தமக்குள் வரைமுறை ஒன்றை விதித்து செயற்பட வேண்டும் என்றும்—இயலாத கட்டத்தில் கட்டுப்பாட்டுக் குழுவிற்கு இது குறித்து அறிவிக்க வேண்டும் என்றும் அந்தக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது. (ஒ-9)

ஸ்ரீலங்கா முகாம்களிலிருந்து

## விடுதலையானோருக்கு சுய வேலைவாய்ப்புத் திட்டம்

யாழ்ப்பாணம், நவ. 1
ஸ்ரீலங்கா இராணுவ முகாம்களிலிருந்து விடுதலையானோருக்கு சுய வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுக்க அகதிகள் புனர்வாழ்வு நிதியம் முன்வந்துள்ளது.

சுயவேலை வாய்ப்புக்கான நிவாரண உதவிகளைப்பெறவிரும்புவோர் விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்து அனுப்பவேண்டும்

சுயவேலை வாய்ப்பானது கூட்டாகவோ, தனியாகவோ மேற்கொள்ளப்படலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீன்பிடி, விவசாயம், கோழி வளர்ப்பு, சிறுகைத்தொழில், கால்நடை வளர்ப்புபோன்றவற்றின்மூலம் இத்திட்டம் செயற்படுத்தப்படும். [ஒ-10)

## மரண அறிவித்தல்

### குமாரசாமி பஞ்சரத்தினம்

குமாரசாமி பஞ்சரத்தினம் ஆசிரியர் சுவிற்சர்லாந்தில் காலமானார் அன்னார் சங்கானையைச் சேர்ந்த காலஞ்சென்ற பிரபல சோதிடர் குமாரசாமி – முத்தம்மா தம்பதிகளின் அன்பு மகனும், குட்டியப்புலம் அ த. வித்தியாலய ஆசிரியை புஸ்பராணியின் அருமைக் கணவரும், காலஞ்சென்ற தர்சினி, பிரணவன் ஆகியோரின் அன்புத் தந்தையும், விநாயகமூர்த்தி (இளைப்பாறிய மின்சார சபை உத்தியோகத்தர்), பாலசுப்பிரமணியம் (மின்சாரசபை சுன்னாகம்), சோமசுந்தரம் (சுவிற்சர்லாந்து), சிவசுந்தரம் (முன்னுள் C. T. B. ஊழியர்). திருமதி தியாகேஸ்வரி நவரத்தினம், சண்முகசுந்தரம் (மாவட்டசபை சங்கானை), ஆகியோரின் அன்புச் சகோதரனும் திருநெல்வேலி கேணியடி விநாசித்தம்பி பொன்னையா, பொன்னம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், கோண்டாவில் கிழக்கு பொ. புகழானந்தத்தின் மைத்துனரும், த. பொன்னம்பலம் (இளைப்பாறிய யாழ் வைத்தியசாலை ஊழியர்), செ. துரைச்சாமி, செ. ராஜசிங்கம் (லிகிதர்), ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் சுவிற்சர்லாந்தில் 31- 10- 1988 இல தகனம் செய்யப்பட்டது. இவ் அறிவித்தலை உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
பொ. புகழானந்தம்
கேணியடி லேன்,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம். (7679)

### முதற் கட்ட....

(1ம் பக்கத் தொடர்ச்சி)
வுக்காக அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது.

கொடுப்பனவு பெறத் தகுதி பெற்றவர்களின் விவரம், கொடுப்பனவு மேற்கொள்ளப்படும் வங்கியின் பெயர் ஆகியவை அடங்கிய பட்டியல் சம்பந்தப்பட்ட கிராமசேவை அலுவலரின் பணிமனையில் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும்.

இந்தப் பட்டியலில் பெயர் உள்ளவர்கள் குறிப்பிட்ட வங்கிகளுக்குச் சென்று கொடுப்பனவு பற்றிய திகதியையும் மற்றும் விவரங்களையும் அறிந்துகொள்ளலாம்.

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு முதற்கட்டமாகக் கொடுப்பனவுக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இதில் அடங்கியுள்ள கிராமசேவகர் பிரிவுகளான ஊரெழுவில் 355 குடும்பங்களும், உரும்பராய் மேற்கில் 204 குடும்பங்களும், கோப்பாய் வடக்கில் 126 குடும்பங்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இந்தப் பிரிவுகளுக்கான பணக்கொடுப்பனவுகள் இலங்கை வங்கியின் யாழ்ப்பாணக் கிளையில் வழங்கப்படும்.

ஏனைய அரசாங்க அதிபர் பிரிவுகளில் நிவாரணப்பணம் பெறுவதற்காகத் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களின் பட்டியல்கள் தொடர்ந்து வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது (உ-5)

## இன்று கைலாசபிள்ளையார் மண்டலாபிஷேக பூர்த்தி

யாழ்ப்பாணம், நவ 1
நல்லூர் ஸ்ரீகைலாசபிள்ளையார் கோயில் மண்டலாபிஷேக பூர்த்தி வைபவம் இன்று சிறப்பாக நடைபெறுகிறது.

கடந்த செப்டம்பர் மாதம் 15 ஆம் திகதி நடைபெற்ற கும்பாபிஷேகத்தை தொடர்ந்து 47 நாட்கள் மண்டலாபிஷேகம் இடம்பெற்றது.

இன்று காலை 7 30 மணிக்கு மகா கணபதி ஹோமத்துடன் கிரியைகள் ஆரம்பமாகின்றன.

அதைத் தொடர்ந்து கணபதிக்கு நவோத்ர சகஸ்ர சங்காபிஷேகமும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கு அத்டோத்ர சத சகஸ்ர சங்காபிஷேகமும் நடைபெறும்.

மாலை 3 மணிக்கு விஷேச பஞ்சமுக அர்ச்சனையும் விசேட சோடசோபசார பூஜையும் தண்டிகையில் ஸ்வாமி வெளி வீதி திரு உலாவும் நடைபெறும். (ஒ)

## கைதிகளுக்கு உடுப்புப் பார்சல்

யாழ்ப்பாணம், நவ 1
பதிய மகசீன் சிறைச்சாலையில் உள்ள தமிழ்க் கைதிகளுக்கு உடுப்புப் பார்சல்கள் வழங்கப்பட்டன.

கடந்த 29 ஆம் திகதி யாழ் செஞ்சிலுவைச் சங்க தொண்டர் உறுப்பினரான யோ ஞானப்பிரகாசம் நேரில் சென்று உடுப்புப் பார்சல்களை வழங்கினார்.

யாழ் செஞ்சிலுவைச் சங்கமும், யாழ் அகதிகள் புனர்வாழ்வுச் சங்கமும் பார்சல்களைத் தந்துதவின. (ஒ-10)

### மரண விசாரணை நடைபெற்றது

யாழ்ப்பாணம் நவ 1
கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் கொழும்புத்துறைப் பகுதியில் துப்பாக்கிச்சூட்டுக்குப் பலியான இளைஞரது பிரேத பரிசோதனை மற்றும் மரணம் தொடர்பான விசாரணை என்பன நேற்று யாழ். வைத்தியசாலையில் நடைபெற்றது.

இறந்தவர் பாஷையூரைச் சேர்ந்த தேவதாஸ் ஜஸ்ரின் விட்ரியன் (வயது 18) என அடையாளம் காணப்பட்டது. (உ-ஐ)

## குதிரைகளுடன் வந்த குமரபுரவிப் படகு

### ஸ்ரீலங்கா கடற் படையினருக்கு "காணிக்கை"

நெடுந்தீவு, நவ. 1
நெடுந்தீவிலிருந்து குதிரைக்குட்டி கொண்டு வரவில்லை என்பதற்காக ஸ்ரீலங்கா கடற்படையினரால் சில நாட்களுக்கு முன் நயினாதீவில் இருந்து திருப்பி அனுப்பப்பட்டபடகு குதிரைக் குட்டிகளை சுமந்து வந்தது.

இரண்டு குதிரைகளையும் சுமந்தபடி குமரபுரவி என்ற இந்தப் படகு நயினாதீவு முகாமில் நிறுத்தப்பட்டபோது அங்குள்ள கடற்படையினர் பெரிதும் மகிழ்ச்சி அடைந்தனர்.

குதிரைகள் இன்றிக் குமரபுரவி வரக்கூடாது எனப் பணித்ததை அடுத்து வேறுவழியின்றி ஆண், பெண் ஜோடிக் குதிரைகள் இரண்டு கடற்படையினருக்கு காணிக்கையாக வழங்கப்பட்டன.

குமரபுரவிப் படகு நெடுந்தீவிலிருந்து குறிகாட்டுவானுக்கு சேவையில் ஈடுபட்டுவருகிறது. நயினாதீவில் கடற்படைச் சோதனைக்காக படகுகள் நிறுத்தப்படுவது வழக்கம்.

உள்ளூர் ஏற்றுமதி இறக்குமதிச் சேவைக்கு படகுகள் தினசரி போக்குவரத்தில் ஈடுபட வேண்டியது தவிர்க்க முடியாத ஒன்றாகும். இதில் தடங்கல்கள் இடம்பெறின் நெடுந்தீவு பலவழிகளாலும் பாதிக்கப்படும் என்பதால் இந்தக் 'காணிக்கை' யைச் செலுத்த வேண்டியது அவசியமாகிவிட்டது எனப் பலர் கருத்துத் தெரிவித்தனர். (இ-111

### தளபாடங்கள் இடம் மாறுகின்றன

வவுனியா நவ 1
சேதமடைந்த வவுனியா சுகாதாரசேவைகள் அலுவலகத்தில் உள்ள தளபாடங்கள், ஆவணங்கள், என்பவற்றை அதிகாரிகள் வேறிடங்களுக்கு எடுத்துச் செல்வதில் ஈடுபட்டுள்ளார்கள்.

இங்கு இடம் பெற்ற அசம்பாவிதத்தின்போது சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் என். எஸ் வசந்தநாதன் பொது சுகாதாரப் பரிசோதகர் திரு. ஆ தனபாலசிங்கம் ஆகியோர் சூட்டுக்குப் பலியானது தெரிந்ததே.

இதனை அடுத்து அலுவலகம் இடம் மாறியுள்ளது. (ஒ- 164)

### இரவில் தொடரும் திருட்டு

குருநகர் நவ 1
குருநகர்புதியசந்தைப் (சின்னக்கடை)பகுதியில் தொடர்ந்தும் இரவு நேரத்திருட்டுக்கள்நடைபெற்றுவருவதாகவர்த்தகர்கள் கூறுகின்றனர்.

புதியசந்தை உட்புறம் உள்ள வெளிக்கடைகளில் திருடர்கள் ஞாயிறன்று இரவு கைவரிசை காட்டியுள்ளனர். (ஒ-51)

## தொழில் நுட்பக் கல்லூரி கல்வி ஆண்டு வகுப்பு

### ஜனவரியிலேயே ஆரம்பமாகும்

யாழ்ப்பாணம் நவ 1
யாழ் தொழில் நுட்பக் கல்லூரியின் கல்வி ஆண்டு வகுப்புக்கள் அடுத்த வருடம் ஜனவரி மாதம்2 ஆம்திகதிமுதலே ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதற்கான அறிவுறுத்தல்களை உயர் கல்வி அமைச்சு அனுப்பிவைத்துள்ளது

அக்டோபர்3ஆம்திகதியில்இருந்தேகல்வி ஆண்டு வகுப்புக்கள் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டிருந்தபொழுதும் தென்பகுதிப் பிரச்சினைகள்காரணமாக உயர்கல்வி அமைச்சு அக்டோபர் 31ஆம் திகதிக்கு அதனை மாற்றம் செய்திருந்தது.

எனினும்தெற்கில்பதற்றம் தொடர்வதை அடுத்து கடந்த வாரம் தொழில் நுட்பக்கல்லூரி அதிபர்கள்மாநாடுஒன்று கொழும்பில் நடைபெற்றது.

அந்த மாநாட்டிலேயே இலங்கை முழுவதும் உள்ள சகல தொழில் நுட்பக் கல்லூரிகளினதும் கல்வி ஆண்டு வகுப்புக்கள் ஜனவரி மாதம் இரண்டாம் திகதியுடன் ஆரம்பிக்கப்படும் என தீர்மானிக்கப்பட்டது. (ஒ-10)

### இன்று தமிழ்த்தின விழா

கோப்பாய், நவ 1
பலாலி ஆசிரியர் கலாசாலை தமிழ் மன்றத்தினர் இன்று தமிழ்த் தின விழாவை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ஸப்த மண்டபத்தில் நடத்துகின்றனர்.

விழாவில் விஞ்ஞான விவசாய, கணித, சுத்தோலிக்க நெறிகளுற்கு இடையிலான நாடகப் போட்டியும் கவிதை, பேச்சு, விவாதப் போட்டிகளும் இடம்பெறும். (ஒ)

### படுமோசமான....

(1ம் பக்கத் தொடர்ச்சி)
கள் ஆகியவையும் இலங்கையின்பொருளாதாரத்தைப் பாதிப்புக்குள்ளாக்கியுள்ளன.

அத்துடன் பணவீக்கம், வேலையில்லாத் திண்டாட்டம், ஏற்றுமதிப் பொருள்களின் உற்பத்திப்பாதிப்பு, அதிகளவு இறக்குமதி ஆகியனவும் இலங்கையின் பொருளாதாரத் துறையைப் பெருமளவு பாதித்திருக்கின்றன.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ-ஐ)

### பயணம்

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் முறையைப்பார்வையிட இந்தியத்தேர்தல் ஆணையாளர் எஸ். பெரிசாஸ்திரி நியூயார்க் பயணமானார்.

பாகிஸ்தான் அணி அவுட்;

## ஆசிய கிண்ண மோதலில் இலங்கை, இந்திய அணிகள்

டாக்கா, நவ. 1
ஆசியக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தில் இலங்கை அணியுடன் இந்திய அணி மோதும்

இந்த இறுதிப்போட்டி எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறும்

நேற்று நடந்த அரை இறுதிப் போட்டியில் இந்திய அணி பாகிஸ்தானை 4 விக்கட்டுக்களினால் தோற்கடித்து இறுதி ஆட்டத்திற்குத் தெரிவானது

முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 42 2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 142 ஓட்டங்களை எடுத்தது.

அஷரத் ஆயூப் 21 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினர். சபில்தேவ், மணிந்தர் சிங் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்

இந்திய அணி 39 4 ஓவர்களில் 6 விக்கட்டுக்கள் இழப்புக்கு 143 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தில் வெற்றி பெற்றது

இந்திய வீரர் அஷரத் ஆயூப் ஆட்டத்தின் சிறப்பு வீரராகத் தெரிவு செய்யப்பட்டார் (உ-எ)

## தாதிகள் நேர்முகப்பரீட்சை நேற்று ஆரம்பமானது

யாழ்ப்பாணம், நவ 1
யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் இருந்து தாதிகள் பயிற்சிக்கு தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை நேற்று ஆரம்பமானது.

கடந்த 16 ஆம் திகதி பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் நடைபெற்ற தாதிகள் போட்டிப் பரீட்சையில் தோற்றியவர்கள் அனைவரையும் இந்த நேர்முகப்பரீட்சைக்கு சமுகமளிக்கும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது.

நேர்முகப் பரீட்சையில் தோற்றியவர்களின் பெயர்ப் பட்டியல் இம்மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் கொழும்புக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளது' (ஒ-5)

## இஸ்ரவேல் பொதுத் தேர்தல் இன்று நடைபெறுகின்றது

டெல் அவிவ் நவ.1
இஸ்ரவேல் நாடாளுமன்றப் பொதுத்தேர்தல் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறும்.

நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை பொதுத்தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

120 உறுப்பினர்கள் கொண்டது இஸ்ரவேல் நாடாளுமன்றம் (நெஸெட்).

27 அரசியல் கட்சிகள் போட்டியிடுகின்றன. 23 லட்சம் பேர் வாக்களிக்கின்றனர். இவர்களில் 15 சதவீதத்தினர் பலஸ்தீனிய அரபுக்கள். (எ)

## வடமாகாணம் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

தபாலபெட்டி எண், 41, யாழ்ப்பாணம்.

கீழ்க்காணும் பதவி வெற்றிடத்திற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் பதிவுத் தபால் மூலம் கீழ்க்காணும் விலாசத்திற்கு 15-11-88 திகதியன்றோ இதற்கு முன்போ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். இப்பதவிக்கு விண்ணப்பிக்கும்போது தபால் உறையில் இடது பக்க மேல் மூலையில் பதவியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

**பதவியின் பெயர்**
களஞ்சியப் பொறுப்பாளர் தரம் II

**சம்பளம்**
855 — 30 X 7. 40 X 8—1385.
(புதிய சம்பளம்)

**தகைமைகள்**
கூட்டுறவுப் பணியாளர் பயிற்சி நெறியில் (சாதாரணம்) சித்தி, க.பொ த. (சாதாரணம்) தில் 6 பாடங்களில் சித்தியுடன், வர்த்தக கணிதம்/கணிதம், தமிழ் உட்பட நான்கு பாடங்களில் விசேட சித்தி பெற்றிருப்பதுடன் களஞ்சியப் பொறுப்பாளர் பதவியில் குறைந்தது நான்கு வருட சேவை அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும்.

**வயது**
25-க்கும் 40-க்கும் இடையில் இருக்கவேண்டும்

**பிணை**
உரொக்கப்பிணை ரூபா. 4275/-
ஆதனப்பிணை

**நற்சான்றிதழ்கள்**
அண்மையில் பெற்றுள்ள இரு நற்சான்றிதழ்கள்.

குறிப்பு:
விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:
வடமாகாணம் கடற்றொழிலாளர்
கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்,
தபால்பெட்டி எண். 41, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் [பிறைவேட்] லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 01- 11- 1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by New Uthayan Publications(pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna on Tuesday 1st November 1988